
janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 ஆகஸ்ட் 14 - ஆகஸ்ட் 20 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 19






ஆக. 6|7|8|9 தேதிகளில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்

## தமிழ்நாடு மாநில 25வது மாநாடு

# திருப்பூர் மாநகர் செம்மயமானது



**விலைவாசி** உயர்வைக் கண்டித்தும் | **வேலையின்மை** பிரச்சினையைத் தீர்க்கக் கோரியும் | **மின்சார திருத்த மசோதாவை** கைவிடக் கோரியும்

ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பாக

# ஆகஸ்ட் 30 இல் மறியல் போராட்டம்

தமிழகத்தில் உள்ள ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஆகஸ்ட் 30 ஆம் தேதி மறியல் போராட்டம் நடைபெறும் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தெரிவித்துள்ளார்.

திருப்பூரில் உள்ள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் செய்தியாளர்கள் சந்திப்பு நடைபெற்றது. இதில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் பேசியதாவது:

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 25 ஆவது மாநில மாநாடு திருப்பூரில் ஆகஸ்ட் 6 ஆம் தேதி தொடங்கி 9 ஆம் தேதி வரையில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் அரசியல் சூழ்நிலை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாட்டினை வாழ்த்தி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் உரையாற்றினார்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவல்

மத்திய அரசு ஆர்.எஸ்.எஸ்.கொள்கைகளைத் திணிக்க எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொள்கிறது.

மக்களவையில் ஆட்சி நடத்துவதற்கான அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசியலமைப்பு சட்டத்துக்கு புறம்பாக செயல்படுகின்றனர். திருப்பூரில் கட்டுக்கடங்காத நூல் விலை உயர்வு காரணமாக பின்னலாடைத் தொழில் மிகவும் நலிவடைந்த நிலையில் உள்ளது. இந்தப் பிரச்னைகளுக்கு எல்லாம் தீர்வு காண வேண்டியது ஒன்றிய அரசின் பொறுப்பாகும். கொரோனா நோய்த் தொற்று காரணமாக தமிழகத்தில் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் அதிக அளவில் மூடப்பட்டு வருகின்றன.

இதனால் கோவை, திருப்பூர் மாவட்டங்களில் உள்ள தொழிலாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒன்றிய அரசு ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை என்ற வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

அரசு மற்றும் தனியார் துறைகளில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் அதிகம் நியமிக்கப்படுகின்றனர்.

இந்த தொழிலாளர்களுக்கு அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதியம் கூட வழங்கப்படுவதில்லை. 2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் மாற்றம் வேண்டும் என்ற அடிப்படையில் தமிழகத்தில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தொடர வேண்டும், அதனை பலப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட 100 தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஒன்றிய அரசு அலுலகங்கள் முன்பாக மறியல்: ஒன்றிய அரசின் விலைவாசி உயர்வு, மின்சார திருத்த மசோதா ஆகியவற்றைக் கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தமிழகம் முழுவதும் ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பு ஆகஸ்ட் 30 ஆம் தேதி மறியல் போராட்டங்கள் நடைபெறவுள்ளன என்றார்.

சந்திப்பின்போது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில கட்டுப்பாட்டுக் குழு தலைவரும், திருப்பூர் மக்களவை உறுப்பினருமான கே.சுப்பராயன், மாநிலக் குழு உறுப்பினர் எம்.ரவி, துணைமேயர் ஆர்.பாலசுப்பிரமணியம், மாவட்டச் செயலாளர் ரவிசந்திரன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராக தோழர் இரா.முத்தரசன் தேர்வு



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு ஆகஸ்ட் 6, 7, 8, 9 ஆகிய தேதிகளில் திருப்பூரில் நடைபெற்றது. இம்மாநாட்டில் தோழர் இரா. முத்தரசன் அவர்களை தோழர் மு. வீரபாண்டியன் முன்மொழிய, தோழர் எம்.செல்வராஜ் எம்.பி. வழிமொழிய மாநிலச் செயலாளராக மூன்றாவது முறையாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

# பாஜக அரசை வீழ்த்த ஓரணியில் அணிதிரள்வோம்!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாட்டில்

# தலைவர்கள் அறைகூவல்!










**பாஜக அரசை வீழ்த்த மதச்சார்பற்ற ஜன நாயக சக்திகள் ஓரணியில் அணி திரள்வோம் என்று மதச்சார்பற்ற கட்சிகளின் தலைவர்கள் சூளுரைத்தனர். திருப்பூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாட்டை முன்னிட்டு ஆகஸ்ட் 6 மாலை சமூக நல்லிணக்கப் பாதுகாப்பு மற்றும் மாநில உரிமைகள் மீட்பு எழுச்சி மாநாடு நடை பெற்றது. இம்மாநாட்டில் பல்வேறு கட்சித் தலைவர்கள் உரையாற்றினர். அப்போது அவர்கள் பேசிய விபரம் வருமாறு:**

**மு.க.ஸ்டாலின்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் பேசியதாவது:

நாம் அனைவரும் ஒரே கொள்கையைச் சார்ந்தவர்கள். தனித்தனி இயக்கமாக இருந்தாலும், கொள்கையால் ஒன்றுபட்டவர்கள் என்ற உணர்வோடுதான் நான் இங்கே பேசிக் கொண்டு இருக்கிறேன்.

அய்யா இரா.நல்லகண்ணுவுக்கு தகைசால் தமிழர் விருது !

அய்யா இரா.நல்லகண்ணு அவர்களுக்கு, இந்த ஆண்டுக்கான தமிழ்நாடு அரசின் தகைசால் தமிழர் விருது வழங்கப்பட இருக்கிறது என்ற அறிவிப்பை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடு நடைபெறும் நாளில் வெளியிட்டிருக்கிறோம் என்பது மிக மிக பொருத்தமான ஒன்று. அய்யா நல்லகண்ணு நாட்டுக்கு தன்னையே ஒப்படைக்கும் மன உறுதி படைத்தவர். எளிமையின் சின்னமாக, கொள்கையின் அடையாளமாக வாழும் அய்யா நல்லகண்ணு அவர்களுக்கு, தகைசால் தமிழர் விருதை வழங்குவதை எனக்குக் கிடைத்த பெரும் பேறாக நான் கருதுகிறேன். அய்யா நல்லகண்ணு அவர்களுக்கு இவ்விருதை வழங்குவதன் மூலமாகத் தமிழ்நாடு அரசு பெருமை அடைகிறது.

காந்தி, ஜீவாவை சந்தித்த சிராவயலில் நினைவு மண்டபம் !

தோழர் இரா.முத்தரசன் விடுத்த கோரிக்கையை ஏற்று, அண்ணல் காந்தியடிகளும், தோழர் ஜீவா அவர்களும் சந்தித்த சந்திப்பின் அடையாளமாக சிவகங்கை மாவட்டத்தில் திருப்பத்தூர் வட்டம், சிராவயல் கிராமத்தில் மணிமண்டபம் அமைக்கப்படும். சமூக, மத நல்லிணக்கத்தின் அடையாளம்தான் அண்ணல் காந்தி அவர்கள். அந்த நல்லிணக்கம் ஏற்பட்டுவிடக்கூடாது என்று நினைப்பவர்களால் அவர் கொலை செய்யப்பட்டார். இந்த மாநிலத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டும் என்று 1953ஆம் ஆண்டிலேயே குரல் கொடுத்தவர் தோழர் ஜீவா. இந்திய நாட்டுக்கு இரண்டு மாபெரும் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன. ஒன்று சமூக நல்லிணக்கத்தைக் கெடுப்பது. மற்றொன்று மாநிலங்களின் உரிமைகளைச் சிதைப்பது. இரண்டுமே மக்களுக்கு எதிரானவை.

அமைதியாக இந்தியா இருப்பதை சிலர் விரும்பவில்லை. இதனைச் சிதைப்பதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறார்கள். இத்தகைய சக்திகள்தான் தேசவிரோத சக்திகள், இவைதான் நாட்டினுடைய எதிரிகள். இந்தியாவின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் உலை வைப்பவர்கள் இவர்கள்தான். ஆனால் இவர்கள் நம்மைப் பார்த்து, தேசவிரோதிகள், நாட்டுக்கு எதிரிகள் என்று சொல்வதுதான் வேடிக்கையாக இருக்கிறது. அனைவரையும் ஒன்றாக நடத்துங்கள், அனைத்து மொழிகளையும் ஒன்றாக மதியுங்கள், அனைத்து இனங்களுக்கும் உரிமைகள் தாருங்கள், எந்த மதத்தைச் சார்ந்தவர்களது வழிபாட்டு உரிமையிலும் தலையிடாதீர்கள், நாம் அனைவரும் ஒரு தாய் மக்கள் என்று சமத்துவம் பேசுவது தேச விரோதமா? அல்லது, ஒரே மதம், ஒரே மொழிதான் இருக்க வேண்டும் என்று சொல்வது தேசவிரோதமா? இந்தியா முழுக்க இன்று கேட்கவேண்டிய கேள்வி இது மட்டும்தான்.

நான் இன்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருக்கிறேன். இது எனக்குத் தானாக வந்துவிடவில்லை. தோழமைக் கட்சிகளாகிய உங்களின் பேராதரவுடன் இந்த இடத்தில் உங்களால் நான் அமர வைக்கப்பட்டுள்ளேன். இந்த ‘திராவிட மாடல்’ ஆட்சிக்கு எதிராக பொய்யையும், அவதூறுகளையும் நாள்தோறும் திட்டமிட்டு பரப்பி வருகிறார்கள். ஆட்சியைப் பற்றி குறைசொல்வதற்கு ஏதும் கிடைக்காததால், அவதூறுகளையும் வெறுப்புப் பிரச்சாரத்தையும் கை கொண்டிருக்கிறார்கள். வளமான தமிழ்நாட்டை அனைவருக்குமான தமிழ்நாட்டை திராவிட மாடலில் நாம் உருவாக்கி வருகிறோம். இந்த திராவிட மாடல் என்பது தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் வழிகாட்டும் தத்துவமாக அமைந்துள்ளது.

75 ஆம் ஆண்டு விடுதலை நாளை நாம் கொண்டாடுவது என்பது வெறும் கொண்டாட்டமாக

>> தொடர்ச்சி 3-ம் பக்கம்

## கட்டுப்பாட்டுக்குழு தலைவராக தோழர் கே.சுப்பராயன் எம்.பி. தேர்வு

திருப்பூரில் நடைபெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாட்டில் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர்களாக கே.சுப்பராயன், ஜி.பழனிசாமி, எம்.வையாபுரி, கோ.பாண்டியன், டி.மணிவாசகம், வீ.ஞானசேகரன், பா.காளிதாஸ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். இந்தக் கட்டுப்பாட்டுக்குழு கூடி தோழர் கே.சுப்பராயனை தலைவராக தேர்வு செய்தது.
















>>2-ம் பக்கத் தொடர்ச்சி

மட்டும் இருக்கக் கூடாது! இன்னும் பல நூறு ஆண்டு களுக்கு, இந்தியா வலிமை உள்ளதாக இருப்பதற்கான திட்டமிடுதலாக நமது சிந்தனைகள் அமைய வேண்டும். இந்தியாவைக் காப்பாற்ற வேண்டுமானால், இந்திய ஒன்றியத்துக்குள் உள்ளடங்கி உள்ள அனைத்து மாநிலங்களையும் காப்பாற்ற வேண்டும்.

மாநிலங்களிடம் இருக்கிற நிதி உரிமையைப் பறிக்கிறது. ஜி.எஸ்.டி வரி. வரியை ஏற்றிவிட்டு, மாநிலங்களின் மீது பழிபோட்டு தப்பிக்கப் பார்க்கிறார் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். வரியை மொத்தமாக வாங்கிக் கொண்டு, அதற்கான இழப்பீட்டை உரிய காலத்துக்குள் தராமல் மாநிலங்களை வஞ்சித்து வருகிறார்கள். மாநிலங்களிடம் இருக்கிற கல்வி உரிமையை, புதிய கல்விக் கொள்கை மூலமாகவும், நீட் போன்ற தேர்வுகளின் மூலமாகவும் பறிக்கிறார்கள். சமூக விடுதலை பேசிய திராவிட இயக்கமும் நாட்டு விடுதலை பேசிய காங்கிரஸ் கட்சியும், தேச விடுதலையோடு, பொருளாதார, வர்க்க விடுதலைக்குப் போராடிய கம்யூனிஸ்ட் இயக்கமும் இன்றைக்கு ஒரே அணிக்கு வந்திருக்கிறோம். ஏனென்றால், இன்று அனைவரும் பேச வேண்டியது சமூக நல்லிணக்கமும் மாநில உரிமைகளும்தான். தனித்தனியாக போராடி வந்த நாம் இன்று ஒன்றாகப் போராட வேண்டி ஒன்று சேர்ந்துள்ளோம்.

இது தேர்தல் கூட்டணி அல்ல; கொள்கைக் கூட்டணி என்று நான் தொடர்ந்து சொல்லி வருகிறேன். தேர்தல் கூட்டணி என்றால் தேர்தலோடு முடிந்துவிடும். கொள்கைக் கூட்டணியாக இருப்பதால், நம் கொள்கையில் வெற்றி பெறும் வரை இது தொடரும். இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

**டி.ராஜா:** இந்த மாநாட்டில் துவக்கவுரையாற்றிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் டி.ராஜா பேசுகையில், நாடு சுதந்தி ரம் பெற்றபோதே துயரத்துடன் தான் தொடங்கி யது. இந்து, முஸ்லிம் என கலவரம் ஏற்பட்டு ஏராளமானோர் கொல்லப்பட்டனர். சிறிது காலத்தில் மகாத்மா காந்தியும் கொல்லப்பட் டார். இந்த சூழலில்தான் இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்க வேண்டிய கடமை அம்பேத்கருக்கு இருந்தது. அவர் மிகுந்த மன அழுத்தமான சூழ்நிலையில் இப்பணியில் ஈடுபட்டார். இந்தியாவை மத அடிப்படையில் மாற்ற முயன்ற சூழலில், அம்பேத்கர் மதச்சார்பற்ற அரசியல் சட்டத்தை உருவாக்கினார். இந்த நாட் டுக்கு இரண்டு ஆபத்துகள் உள்ளன என்று அவர் கூறினார். இரண்டு "பி" என்று சொன்ன அவர் ஒன்று பிராமணியம், மற்றொன்று பூர்ஷ்வா (முதலாளித்துவம்) என்று அப்போதே சொன்னார். கம்யூனிஸம் ஆபத்தான தத்துவம் என்று மோடி சொல்கிறார். அவர்களது எதிரி யார் என்று அவர்களுக்கு நன்றாகத் தெரிகிறது. மக்க ளுக்கான மாற்றுக் கொள்கையுடன், ஏற்றத் தாழ்வுகளை களையக்கூடிய மதச்சார்பற்ற விரி வான அணிச்சேர்க்கையை உருவாக்குவோம், என்றார்.

**இரா.முத்தரசன்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் பேசும்போது, ஆர்.நல்ல கண்ணுவுக்கு தகை சால் தமிழர் விருது வழங்கி யதன் மூலம் விருதுக்குப் பெருமை என்று முதல் வர் குறிப்பிட்டதை சுட்டிக்காட்டி நன்றி தெரி வித்தார். அத்துடன் சிவகங்கை மாவட்டம் சிரா வயலில் ஜீவா ஆசிரமத்தில் காந்தியடிகள் வந்து சந்தித்ததன் நினைவாக சிராவயலில் நினைவு மண்டபம் கட்ட வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று அங்கு நினைவு மண்டபம் கட்டப்படும் என தமிழக முதல்வர் அறிவித்ததற்கும் அவ ருக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

**கே.சுப்பராயன் எம்.பி.,:** திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் பேசும்போது, அக்டோபர் புரட்சியின் லட்சியம் ஒருபோதும் வீழ்ச்சி அடையாது. சிட்டுக்குருவிகளுக்கு வல்லூறை வீழ்த்தும் வல்லமையைக் கொடுத்தது இந்த இயக்கம். சமூகம் இணங்கி வாழ வேண்டும், பிணங்கி வாழ முடியாது. இந்த அரசியல் கட மையை நிறைவேற்றுவதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முன்னின்று போராடும் என்றார்.

**கே.எஸ்.அழகிரி:** தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி பேசும்போது, நாடு விடுதலை பெற்று சமூக நல்லிணக்கம், பொருளாதார மேம்பாடு, சமூக நீதி, மொழி உரிமை எல்லாம் பெற்றுக் கொடுத்தி ருக்கிறோம். இதற்குப் பிறகும் இதற்கு நேர் எதி ரான ஆர்எஸ்எஸ் தத்துவம் தலை தூக்குகிறது என்றால் அதற்கான காரணத்தை நாம் கண்டு பிடிக்க வேண்டும். இடதுசாரிகளை விட தியா கம் செய்தவர்கள் யாரும் இருக்க முடியாது. பாஜக ஆர்எஸ்எஸ்ஐ வீழ்த்தி மாபெரும் வெற்றி பெறுவோம் என்று கூறினார்.

**கி.வீரமணி:** திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பேசுகையில், 2024இல் பாஜக ஆட்சி பீடம் ஏறக் கூடாது, அதற்கான திட்டத்தை எப்படி உரு வாக்குவோம் நமது பணி தீயணைப்பு நிலையம் போன்றது. தீயணைப்பு வீரர்கள் எப்போதும், எதற்கும் தயா ராக இருப்பார்கள். அது போல நம் நாட்டைப் பற்றிய மதவெறித் தீயை அணைக்க நாம் எப்போ தும் எதற்கும் தயாராக இருப்போம். பாஜக வித்தைகளைக் காட்டி ஆட்சியில் இருக்கிறது. இன்னும் ஒன்றரை ஆண்டு காலத்தில் தேர்தல் வர இருக்கிறது. தமிழ்நாட்டில் இருக்கும் கொள்கைக் கூட்டணி போல் இந்தியா முழு வதும் உருவாக வேண்டும் என்றார்.

**வைகோ :** மதிமுக பொதுச் செயலாளர் வைகோ பேசியதாவது: "பொதுவுடமை கொள்கைக்காக தன்னை அர்ப்பணித்துள்ள தலைவர்கள் நிறைந்துள்ள அவை இது. தொடக்க காலத்தில் கம்யூனிஸ்ட் இயக்கத்தினர் அனுபவித்தது கொஞ்சம் அல்ல. தூக்குமேடைகளையும், எண்ணிடலங்கா சித்ரவதைகளையும் அனுபவித்தவர்கள். பல்வேறு போராட்டங்களில் துப்பாக்கி குண்டுகளுக்கும், தூக்கு கயிறுகளுக்கும் அஞ்சாமல் இருந்தவர்கள். 'தகைசால் தமிழர்' நல்லகண்ணு வீரம் நிறைந்தவர். எதற்கும் அஞ்சாதவர். அனைவருக்கும் மரியாதை கொடுக்கும் பண்புள்ளவர். உயிர்பலிக்கு அஞ்சாமல் நல்லக்கண்ணு போராடி கட்சியை வளர்த்தார். கோவை, திருப்பூர் என கம்யூனிஸ்ட் இயக்கத்தினரின் உயிர்த் தியாகத்தால் கட்சி மிக வளர்ந்த இடம் இது.

இந்தியாவில் வேறெங்கும் இல்லாத அளவுக்கு கான்பூருக்கு பிறகு, சுகாதாரப் பணியாளர்கள், பஞ்சப்படி போராட்டங்களுக்கு வெற்றி கிட்டிய இடம் திருப்பூர். இந்தியாவில் வேறெங்கும் நிகழவில்லை. நாட்டின் சுதந்திரத்துக்கு பிறகு காங்கிரஸ் ஆட்சிக்கு பிறகு இன்றைக்கு நம்மை ஆண்டுகொண்டிருக்கும் பாஜக இந்துத்துவா கொள்கையை புகுத்துகிறது. ஒரே மொழி, ஒரே நாடு, ஒரே மதம் என்பதை திணிக்கிறது.

ஒரே நாடாக அமைந்தால், சோவியத் யூனியனை போல் பிரிந்து போகும். அனைத்து மொழி, மதத்துக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும். மதவெறியோடு, சனாதன வெறியோடு, இந்தியை, சமஸ்கிருதத்தை திணிக்கும் போக்கு நடக்கிறது. ஆயுதப் போராட்டத்தை நாம் கையில் எடுக்கத் தேவையில்லை. மோடி அரசு அம்பானி, அதானி கூட்டத்துக்காக ஆட்சி நடத்துகின்றனர். மக்களுக்காக ஆட்சி நடத்தவில்லை.

ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, திருப்பூரில் நாம் எடுத்துக் கொள்ளும் உறுதி, பொருத்தமாக இருக்கும். சனாதன சக்திகளை, இந்துத்வா சக்திகளை முறியடிக்க வேண்டிய அவசியம் நமக்கு ஏற்பட்டுள்ளது. பாஜக எங்கு வளர்ந்தாலும் தமிழகத்தில் அவர்கள் வளர முடியாது என்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டும். தோழமைக் கட்சிகள் ஒன்றாக இணைந்து எந்த அடக்குமுறைக்கு அஞ்சாமல் இந்த ஒற்றுமையை பலப்படுத்தினால், தமிழகத்தில் பாஜக தலை எடுக்க முடியாது. நமக்கு கடமை இப்போதுதான் ஆரம்பிக்கிறது.

உங்கள் முன்பு பேசும்போது, சோர்வு அகன்று, களைப்பு நீங்கிவிடுகிறது. போராளி என்று சொல்வதில் கிடைக்கும் மகிழ்ச்சி வேறு எதிலும் இல்லை'' என்று அவர் பேசினார்.

**கே.பாலகிருஷ்ணன்:** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் பங்கேற்றுப் பேசியதாவது:

இந்த ஆண்டு மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணுவுக்கு தமிழக அரசு தகை சால் தமிழர் விருது வழங்கியிருப்பதற்கு நெஞ்சார்ந்த வாழ்த்துகள், தமிழக முதல்வ ருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் நாம் ஏற்படுத்தி இருக்கும் மதச் சார்பற்ற அணியை போல் நாடு முழுவதும் மேம்படுத்தி விரிவுபடுத்த வேண்டும். பாரதிய ஜனதாவை ஆட்சியில் இருந்து விரட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கட்சியும் மகத்தான கடமையை நிறைவேற்றுவோம். இந் தியா பல வண்ணங்கள் சேர்த்து கட்டப்பட்ட மாலையைப் போன்றது. மதவெறி, சாதிவெறியைத் தூண்டிவிட்டு இதை சிதைக்கப் பார்க்கிறார்கள்.

பாரதிய ஜனதா கட்சி சொல்லும் ஒரே நாடு என்ற முழக்கம் நம் நாட்டின் பாரம்பரியமான பண்பாட்டுக்கு எதிரானதாகும். இந்தியாவின் அடிப்படைப் பண்பாட்டை அவர்களால் சீரழிக்க முடியாது. இந்தியாவின் பல மாநிலங்கள் இருப்பது வெறும் அரசு நிர்வாக ஏற்பாடு விசயமல்ல. இந்தியாவில் ஒரு மாநிலம் என்றால் அது ஒரு கலாச்சாரத்தை, ஒரு மொழியை, வெவ்வேறு பண்பாட்டு முறையை கொண்டிருக்கிறது. இந்த நாடு ஒருபோதும் ஆர்எஸ்எஸ்சின் ஒற்றைத் தன்மையை ஏற்காது.

பக்கத்தில் இருக்கும் இலங்கையில் ராஜ பக்சே குடும்பத்தினர் மக்களை சூழ்ச்சி செய்து பிரித்து வைத்து ஆட்சி நடத்தினர். ஆனால் இன்று குடும்பத்தோடு நாட்டை விட்டு ஓட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்தியாவில் மோடி அரசு பின்பற்றும் பொருளாதாரக் கொள்கை விலை வாசி உயர்வு, வேலையின்மையை அதிகரித்துள்ளன. நாடு மோசமான நிலையில் உள்ளது. இலங்கையில் இருக்கும் நிலைதான் ஏறக்குறைய இங்கும் இருக்கிறது. இந்தியாவில் மக்கள் கொந்தளிக்கக்கூடிய சூழ்நிலை உள்ளது. பாஜக அரசின் சூழ்ச்சிகரமான நாசகர அரசியலுக்கு எதிராக தேசம் தழுவிய மகத்தான இயக்கத்தைக் கட்ட வேண்டியிருக்கிறது.

தமிழகத்தில் மதச்சார்பற்ற அணி கம்பீரமாக உள்ளது. அதிமுக இபிஎஸ், ஓபிஎஸ், சசிகலா என பல அணிகளாக இருக்கின்றன. ஆனால் அவர்கள் மோடியிடம் சரணாகதி அடைந்திருக்கிறார்கள். மோடிக்கு காவடி தூக்குவதில் அவர்களுக்குள் வேறுபாடு கிடையாது. தமிழக மக்கள் இந்த துரோக கும்பலை அடையாளம் காண வேண்டும். இவ்வாறு கே.பாலகிருஷ்ணன் கூறினார்.

**தொல்.திருமாவளவன் எம்.பி.,:** விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் தொல்.திருமாவளவன் பேசுகையில், ஜனநாயக சக்திகளை ஒருங்கிணைக்கும் களமாக இம்மாநாடு நடக்கிறது. தமிழகத்தைத் தாண்டி தேசிய அள வில் ஒருங்கிணைக்க வேண்டிய தேவை இருக்கி றது. 2024இல் மிக மிக கவனமாக தேசிய பார்வை யுடன் அனைத்து ஜனநாயக சக்திகளையும் ஒருங்கிணைக்க இடதுசாரிகள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

**காதர் மொஹைதீன்:** இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் காதர் மொஹைதீன் பேசுகையில், வேற்றுமையில் ஒற்றுமை என்ற நீண்ட பாரம்பரி யம் கொண்டது நம் நாடு. ஜனநாயகத்தின் ஆணி வேராக இருக்கும் அரசியல் சட்டம் நிலை நிறுத்தப்பட வேண்டும். அதற்கான ஆற்றல் நம் மக்களிடம் உள்ளது. பாசிசத்தைத் தடுத்து நிறுத்தி ஜனநாயகத்தைப் பாதுகாக்க அனை வரையும் ஒன்றுபடுத்தியாக வேண்டும், என்றார்.

**ஜவாஹிருல்லா:** மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் ஜவாஹிருல்லா பேசுகையில், என்றென்றும் மனித நேயத்தைப் பேணும் மண்ணாக நம் மண் இருந்தி ருக்கிறது. வெள்ளையர்களுக்கு எதிராக போரா டிய திப்புசுல்தானுக்கு உதவியாக தோளோடு, தோள் சேர்ந்து போர் புரிந்தவர் தீரன் சின்ன மலை. இந்த வரலாற்றை சங் பரிவாரம் சிதைக்கப் பார்க்கிறது. சாதி மத வேறுபாடுகளைக் கடந்து அனைவரும் ஒரே வரிசையில் நின்றுதான் வெள் ளையர்களை விரட்ட முடிந்தது. ஆர்எஸ்எஸ் பாஜக முஸ்லிம்களுக்கு எதிரானது மட்டுமல்ல, சமூக நல்லிணக்கம், மாநில உரிமையை பறிக்கும் சித்தாந்தத்தைக் கொண்டதாகும். இவர்களைத் தோற்கடிக்கும் வல்லமை இடதுசாரிகளுக்கு உண்டு என்பதில் எங்களுக்கு முழு நம்பிக்கை உள்ளது, என்றார்.

மேலும், அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், கயல்விழி செல்வராஜ், கொ.ம.தே.க. பொதுச்செயலாளர் ஈஸ்வரன், தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன், மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் மாநில செயலாளர் நடராஜன் உள்ளிட்ட தோழமை கட்சி நிர்வாகிகள் பங்கேற்று பேசினர்.



# தோழர் இரா.நல்லகண்ணுக்கு தமிழக அரசின் 'தகைசால் தமிழர்' விருது

தமிழக அரசின் 'தகைசால் தமிழர்' விருதுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: இந்த ஆண்டுக்கான 'தகைசால் தமிழர்' விருதாளரை தேர்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவின் ஆலோசனைக் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதில், 2022ம் ஆண்டுக்கான 'தகைசால் தமிழர்' விருதுக்கு இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் இரா. நல்லகண்ணு தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர் இளம் வயதிலேயே பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றார். தனது இளம் வயதை சிறைச்சாலையிலும், தலைமறைவு வாழ்க்கையிலும் கழித்தார். ஏழை மக்களுக்காக குரல்கொடுத்து, சமூக நல்லிணக்கத்தையும், சுற்றுச்சூழலையும் காக்க தொடர்ந்து பாடுபட்டு வருகிறார்.

தன்னலமற்ற சிறந்த அரசியல்வாதியாகவும் செயல்பட்டு, தமிழ்நாட்டுக்கும், தமிழ் இனத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பு அளித்த தமிழராக விளங்குகிறார். அதனால், 2022ம் ஆண்டுக்கான 'தகைசால் தமிழர்' விருதுக்கு இரா.நல்லகண்ணுவை தேர்வுக் குழுவினர் ஒருமனதாக தேர்ந்தெடுத்துள்ளனர்.

இவ்விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இரா. நல்லகண்ணுவுக்கு ரூ.10 லட்சத்துக்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழை வரும் 15ம் தேதி நடைபெறும் சுதந்திர தின விழாவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்க இருக்கிறார். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுக்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில் 'தகைசால் தமிழர்' என்ற பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த ஆண்டு அறிவித்திருந்தார்.

முதல் விருது, சுதந்திரப் போராட்ட வீரரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னோடிகளில் ஒருவருமான, நூற்றாண்டு கண்ட என்.சங்கரய்யாவுக்கு கடந்த ஆண்டு சுதந்திர தின விழாவன்று வழங்கப்பட்டது. இந்த ஆண்டு இரா. நல்லகண்ணு இவ்விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

தலைவர்கள் வாழ்த்து

இரா.நல்லகண்ணுவுக்கு விருது அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், பல்வேறு கட்சித் தலைவர்கள் அவருக்கு வாழ்த்து தெரி வித்து வருகின்றனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன்: இரா.நல்லகண்ணுக்கு விருது அறிவிக்கப் பட்டது, நாடு 75வது சுதந்திர தினத்தைக் கொண்டாடவிருக்கும் இத்தருணத்தில், இந்திய விடுதலைப் போராட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆற்றிய பங்கையும், தியாகத்தையும் போற்றுவதாக அமைந்துள்ளது.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி: இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவரும், சிறந்த கொள்கை வீரரும், எளிமையின் சின்னமுமான இரா. நல்லகண்ணுக்கு தமிழக அரசு சார்பில் 'தகைசால் தமிழர் விருது' அறிவிக்கப்பட்டுள்ளது மிகவும் பொருத்தமானது. இதைப் பாராட்டி வரவேற்கிறோம்.

சட்டப்பேரவை காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை: இரா.நல்லகண்ணு இந்த விருதுக்கு மிகவும் பொருத்தமானவர். அவருக்கு எனது உளப்பூர்வமான வாழ்த்துகள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 19

# செங்கொடியின் முற்றுகையில் திருப்பூர்!

வானம் செங்குழம்பைபூசிக் கொண்ட நேரம். அரசியல் குழப்பம் உடைக்கும் செம்படையின் அணிவகுப்பு விண்ணை முட்டும் முழக்கங்களோடு திருப்பூர் வீதிகளில் திரு உலா கண்டது !

இது வர்க்கப் பகைவரை எதிர்கொள்ளும் ஆற்றல் ! சொர்க்க மயக்கத்தில் இருப்போரை கற்க வைக்கும் கடும் முயற்சி !

பருக்கைக்கு வழியற்ற ஏழை பாழைகளின் பகைவருக்கு எதிரான செருக்கை சுமந்திட்ட செம்படையின் செம்மார்ந்த அணிவகுப்பு !

இளம் பெண்களும், ஆண்களுமாய் மொட்டுகளும், அரும்புகளும் தங்கள் தளிர் கரங்களில் பளீர் செங்கொடி ஏந்தி நடைபோடும் காட்சி மகத்தான மக்கள் இயக்கத்தின் மாட்சி !

இடதுசாரிகளுக்கு எதிர்காலம் உண்டு என்பதை காட்டியது அல்ல இது. மாற்றம் என்பதே மாறாதது. அதற்கு ஏற்றம் எப்போதும் உண்டு என்பதை இது கட்டியம் கூறிற்று !

மதவெறிப் பகை கிழிக்கும் நெருப்பு ஊற்றாய் கொப்பளித்த கோப முழக்கங்களில் இம்மியளவும் இல்லை தனி நபர் துதி ! தனி நபர் பழி !

உழைக்கும் வர்க்க வியர்வை மொழியே வியாபித்த வியப்பை அங்கு கொங்கு மண்டலம் கண்ணாற கண்டிற்று !

சாரை சாரையாக சாலை முழுவதும் செஞ்சட்டையோடு தமிழகத்தின் அரசியல் செம்மையுற தடம் புரளா வைரமாய், புடம்போட்ட தங்கமாய், வசந்தத்தின் இடி முழக்கமாய், வாசலில் இட்ட வண்ணக் கோலமாய், பூசலற்ற புது உலகு படைத்திட புரட்சியாளர்களின் வீர அணிவகுப்பு பார்ப்போரையும் பரவசப்படுத்தியது !

வெந்ததை தின்று விதி வந்தால் சாவதற்கு அல்ல நாங்கள் ! வேதனை தீர்க்கும் அருமருந்தாய் அர்த்தமற்ற அரசியலை அர்த்தம் பொருந்தியதாய் மாற்றிட, கோடான கோடி கரங்களை இணைக்கும், பிணைப்பு பட்டையாக பீரிட்ட நீரூற்றாய், நேரிட்ட காட்சிகள் எத்தனை ! எத்தனை !

வெறுப்பு அரசியலின் வேரில் வெந்நீர் ஊற்றும் செந்நீர் சிந்திய தியாக செங்கொடியாம் அதன் இன்றைய வார்ப்புகள் அலை அலையாய் எழுப்பிய ஆவேச முழக்கங்கள் !

1942ல் வெள்ளையனை வெளியேற்றும் விடுதலைக்கான ஆகஸ்ட் புரட்சி ! அதே ஆகஸ்ட் 2022ல் கொள்கையற்ற கோட்டான்களை கொள்ளையர்களை வெளியேற்றும் செம்புரட்சி ! மீண்டும் அறங்கேறிற்று திருப்பூர் மண்ணில் !

நகரின் அனைத்து வீதிகளிலும் உடலில் செவ்வாடை உறுதிமிக்க கரங்களில் செங்கொடி என குடும்பம் குடும்பமாய் அணிவகுத்த தோழர்கள் ஆயிரம், ஆயிரம் ! இது குறித்து பாயிரம் பாட பாரதியும், பட்டுக்கோட்டையும் இல்லையே என்று ஏங்கிற்று சமூகம் !

கூட்டம் சேர்ப்பதற்கே கோடிகள் சில செலவழித்து ஆடல், பாடல், நாட்டியம் என அசத்தும் நிகழ்த்துக் கலைகள் முழங்க மக்களை ஈர்க்கும் மதிநுட்பத்தோடு கட்சிகள் பல செயல்படும் இக்காலத்தில் சொந்த காசை செலவழித்து சிந்தை முழுவதும் சித்தாந்த அலைமோதும் நெஞ்சோடு நேர்ந்திற்று இப்பெரும் பாய்ச்சல் !

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் நிலைப்பாட்டில் மீது அதன் அழுத்தமான போர்க்குணம் மீதும் பெரும் காதல் கொண்ட இளையோர் கூட்டம் இன்னும் இன்னும் ஏராளம் என்பதை எடுத்துக் காட்டியது இப்பேரணி !

செங்கொடி பூத்த சிறு மலர்கள் முதற்கொண்டு வெங்கொடுமைக்கு எதிராகப் போராடிய புகழார்ந்த முதியவர் வரை வீர நடைபோட்ட போரணி இது !

தேச விடுதலைப் போராட்டத்தில் விரல் நுனியளவு கூட எந்தப் பங்கும் வகிக்காத சங்க பரிவார பா.ஜ.க. கும்பல் இன்று இல்லம் தோறும் தேசியக் கொடி ஏற்ற வேண்டும் என்று உபதேசம் செய்கிறது !

தேசியக் கொடிக்கான விதியில் மாற்றங்கள் பல கொண்டு வந்து கதர் துணியில்தான் தேசியக் கொடி இருக்க வேண்டும் என்ற அதன் வரையறையை பாலீஸ்டர் துணிக்கு மாற்றிய முரட்டு தேசபக்தர்கள் இவர்கள் !

இந்தக் கொடியையும் ரூ.20க்கு விற்று தனது வணிக எஜமானர்களுக்கு லாபம் கூட்டிடும் நரித்தந்திரத்தை சரி என்போர் யார்? இந்த கொடி வாங்கி ஏற்றாத குடும்பங்களுக்கு பொது விநியோக அட்டை நீக்கப்படுமாம் ! என்னே பிதற்றல் !

பிரதமர் மோடி அவர்களே, நீங்கள் ஒன்றும் பிதா மகன் அல்ல !

பொதுத்துறை தனியார்மயம், வேலை உரிமைக்கு வேட்டு, சமூக நீதிக்கு சமாதி, மக்கள் எதிர்ப்பு வந்தால் இருக்கவே இருக்கிறது மத வெறுப்பு அரசியல் அதையும் சமாளி ! என்பதே இந்த நடிப்பு தேசபக்தர்களின் நரித்தந்திரம். அவர்களின் தேசபக்த வேஷம் கலைக்க இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செங்கொடி புத்திரர்களின் செயல் தீரமும், சிந்தனை வியூகமும் அதை தவிடு பொடியாக்கும் என்பது மட்டும் சர்வ நிச்சயம் !

75வது சுதந்திர தினத்தில் எழுவது ஆறாத சினம் ! மாறாத போர்க்குணம் !

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு 25வது மாநில மாநாட்டில் தேர்வு செய்யப்பட்ட

## மாநிலக் குழு உறுப்பினர்கள்

திருப்பூர் மாநகரில் 06.08.2022 முதல் 09.08.2022 வரை நடைபெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில 25 வது மாநாட்டில் 101 உறுப்பினர்கள் கொண்ட மாநிலக் குழு தேர்வு செய்யப்பட்டது. மாநிலக் குழு உறுப்பினர்கள் பட்டியல் வருமாறு:

### மாநில மையம்

| | |
|---|---|
| 1. | இரா.முத்தரசன் |
| 2. | சி.மகேந்திரன் |
| 3. | மு.வீரபாண்டியன் |
| 4. | டி.எம்.மூர்த்தி |
| 5. | பி.பத்மாவதி |
| 6. | க.சந்தானம் |
| 7. | கே.ரவி |
| 8. | வகிதா நிஜாம் |
| 9. | எம்.இராதாகிருஷ்ணன் |
| 10. | பி.எஸ்.மாசிலாமணி |
| 11. | நா.பெரியசாமி |
| 12. | ஜி.மஞ்சுளா |
| 13. | க.பாரதி |
| 14. | தினேஷ் சீரங்கராஜ் |
| 15. | டாக்டர் த.அறம் |

### நேரடி தனிக் கிளைகள்

| | |
|---|---|
| 16. | பி.காமராஜ் |
| 17. | உ.மா.செல்வராஜ் |
| 18. | ஜி.முரளி |
| 19. | டாக்டர் ஏ.ஆர்.சாந்தி |
| 20. | எஸ்.ராதாகிருஷ்ணன் |
| 21. | டாக்டர் ஜி.ஆர்.ரவீந்தரநாத் |
| 22. | எஸ்.ஏழுமலை |
| 23. | லி.உதயகுமார் |
| 24. | சண்முகம் சரவணன் |
| 25. | எஸ்.எஸ்.கணேசன் |
| 26. | த.லெனின் |
| 27. | திருப்பூர் எம்.ரவி |

| மாவட்டங்கள் | |
|---|---|
| 28. சொ.இராமநாதன் | அரியலூர் |
| 29. என்.எஸ்.பெருமாள் | இராமநாதபுரம் |
| 30. எஸ்.டி.பிரபாகரன் | ஈரோடு தெற்கு |
| 31. பி.எல்.சுந்தரம் | ஈரோடு வடக்கு |
| 32. டி.ஏ.மாதேஸ்வரன் | ஈரோடு வடக்கு |
| 33. சு.மோகன்குமார் | ஈரோடு வடக்கு |
| 34. பி.துரை | கடலூர் |
| 35. கே.என்.நாட்ராயன் | கரூர் |
| 36. கே.ராமசாமி | கள்ளக்குறிச்சி |
| 37. டி.சுபாஷ் சந்திரபோஸ் | கன்னியாகுமரி |
| 38. பா.கார்த்திக் | காஞ்சிபுரம் |
| 39. எம்.இலகுமையா | கிருஷ்ணகிரி |
| 40. டி.ராமச்சந்திரன் எம். எல் ஏ. | கிருஷ்ணகிரி |
| 41. டி.சின்னசாமி | கிருஷ்ணகிரி |
| 42. ஆர்.சுந்தரவள்ளி | கிருஷ்ணகிரி |
| 43. எம்.பூதட்டியப்பா | கிருஷ்ணகிரி |
| 44. பி.பழனி | கிருஷ்ணகிரி |
| 45. எம்.கே.மாதையன் | கிருஷ்ணகிரி |
| 46. கோவிந்த் நாயக் | கிருஷ்ணகிரி |
| 47. எஸ்.கண்ணு | கிருஷ்ணகிரி |
| 48. எம்.ஆறுமுகம் | கோயமுத்தூர் |
| 49. சி.சிவசாமி | கோயமுத்தூர் |
| 50. எஸ்.குணசேகரன் | சிவகங்கை |
| 51. மு.கண்ணகி | சிவகங்கை |
| 52. நா.சாத்தையா | சிவகங்கை |
| 53. ஏ.ராஜ்குமார் | செங்கல்பட்டு |
| 54. ஏ.மோகன் | சேலம் |
| 55. எம்.ராமன் | சேலம் |
| 56. முத்து.உத்திராபதி | தஞ்சாவூர் தெற்கு |
| 57. மு.அ.பாரதி | தஞ்சாவூர் வடக்கு |
| 58. ந.நஞ்சப்பன் | தருமபுரி |
| 59. எஸ்.தேவராசன் | தருமபுரி |
| 60. எஸ்.கலைச்செல்வன் | தருமபுரி |
| 61. கா.சி.தமிழ்குமரன் | தருமபுரி |
| 62. எஸ்.சின்னசாமி | தருமபுரி |
| 63. எம்.மாதேஸ்வரன் | தருமபுரி |
| 64. எஸ்.கமலாமூர்த்தி | தருமபுரி |

| மாவட்டங்கள் | |
|---|---|
| 65. ஏ.பி.மணிகண்டன் | திண்டுக்கல் |
| 66. எஸ்.சிவா | திருச்சி மாநகர் |
| 67. செ.லட்சுமணன் | திருநெல்வேலி |
| 68. எம்.சுந்தரேசன் | திருப்பத்தூர் |
| 69. கே.எம்.இசாக் | திருப்பூர் புறநகர் |
| 70. எஸ்.ரவிச்சந்திரன் | திருப்பூர் மாநகர் |
| 71. இரா.தங்கராசு | திருவண்ணாமலை |
| 72. கே.கஜேந்திரன் | திருவள்ளூர் |
| 73. வை.செல்வராஜ் | திருவாரூர் |
| 74. வை.சிவபுண்ணியம் | திருவாரூர் |
| 75.. எம்.செல்வராஜ் எம்.பி. | திருவாரூர் |
| 76. கே.உலகநாதன் | திருவாரூர் |
| 77. க.மாரிமுத்து எம்எல்ஏ, | திருவாரூர் |
| 78. ஆர்.சந்திரசேகர ஆஸாத் | திருவாரூர் |
| 79. அ.பாஸ்கர் | திருவாரூர் |
| 80. பி.கரும்பன் | தூத்துக்குடி |
| 81. பி.ஞானசேகர் | தூத்துக்குடி |
| 82. டி.இசக்கிதுரை | தென்காசி |
| 83. எஸ்.கே.சிவா | தென்சென்னை |
| 84. கி.பெருமாள் | தேனி |
| 85. சிவகுரு பாண்டியன் | நாகப்பட்டினம் |
| 86. கே.அன்புமணி | நாமக்கல் |
| 87. பி.போஜராஜன் | நீலகிரி |
| 88. த.செங்கோடன் | புதுக்கோட்டை |
| 89. வி.ஜெயராமன் | பெரம்பலூர் |
| 90. பா.கருணாநிதி | மத்திய சென்னை |
| 91. பி.முத்துவேல் | மதுரை புறநகர் |
| 92. எம்.எஸ்.முருகன் | மதுரை மாநகர் |
| 93. அ.சீனிவாசன் | மயிலாடுதுறை |
| 94. த.கு.வெங்கடேஷ் | வட சென்னை |
| 95. தி.இராமசாமி | விருதுநகர் |
| 96. பொ.லிங்கம் | விருதுநகர் |
| 97. எஸ்.செந்தில்குமார் | விருதுநகர் |
| 98. வி.பாலமுருகன் | விருதுநகர் |
| 99. ஆ.சௌரிராஜன் | விழுப்புரம் |
| 100. ஜி.லதா | வேலூர் |
| 101. ராஜலட்சுமி | மதுரை மாநகர் |

# மதச்சார்பற்ற கட்சிகள், இடதுசாரிகள் ஒன்றுபட்டு பாஜகவை வீழ்த்த வேண்டும்

## டி.ராஜா பேச்சு!

2024 ஆம் ஆண்டு நடைபெறும் மக்களவைத் தேர்தலில் மதச்சார்பற்ற ஜனநாயக கட்சிகள், இடதுசாரி கட்சிகள் ஒன்றுபட்டு பாஜகவை வீழ்த்த வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் டி.ராஜா வலியுறுத்தியுள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 25 ஆவது மாநில மாநாடு திருப்பூரில் ஆகஸ்ட் 6 அன்று தொடங்கி 4 நாட்கள் நடைபெற்றது. மாநாட்டின் இறுதி நாளான ஆகஸ்ட் இரவு மிகப் பிரம்மாண்டமான பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்தப் பொதுக்கூட்டத்துக்கு, திருப்பூர் மக்களவை உறுப்பினர் கே.சுப்பராயன் தலைமை வகித்தார்.

இதில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் டி.ராஜா பேசியதாவது:

1942 ஆம் ஆண்டு இதே நாளில் (ஆகஸ்ட் 9 ஆம் தேதி) வெள்ளையனே வெளியேறு இயக்கம் நடைபெற்றது. காந்தி வாழ்நாள் முழுவதும் ஹிந்துக்கள், முஸ்லிம்கள் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாக ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதற்காகவே வாழ்ந்தார். இதனால்தான் சுதந்திரம் பெற்றவுடன் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார். சுதந்திரப் போராட்டத்தில் சித்திரவதைகளை அனுபவித்து, தியாகங்களைச் செய்தவர்கள் கம்யூனிஸ்ட் இயக்கத்தை சார்ந்தவர்களாகத்தான் உள்ளனர். இத்தகைய தியாகங்களை செய்து விடுதலை பெற்ற இந்தியாவில் தற்போது பாஜக ஆட்சியில் உள்ளது. பாஜக ஆட்சியால் நாட்டு மக்களின் ஒற்றுமை, மத நல்லிணக்கம், அம்பேத்கர் தலைமையில் வடிவமைக்கப்பட்ட அரசியல் சட்டம் போன்றவை தகர்க்கப்படுகிறது. 2024 ஆம் ஆண்டு நடைபெறும் மக்களவைத் தேர்தலில் பாஜக தோற்கடிக்கப்பட வேண்டும். 2024 ஆம் ஆண்டு தேர்தலில் மதச்சார்பற்ற ஜனநாயக கட்சிகள், இடதுசாரி கட்சிகள் ஒன்றுபட்டு பாஜகவை வீழ்த்த வேண்டும் என்று பேசினார்.

பேரணியில் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்பு:




மாநாட்டையொட்டி செம்படை பேரணி திருப்பூர் ஸ்ரீசக்தி திரையரங்கம் அருகில் பிற்பகல் 3 மணி அளவில் தொடங்கியது. இந்தப் பேரணியானது நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்று காங்கேயம் சாலையில் இரவு 8 மணி அளவில் நிறைவடைந்தது. இந்தப் பேரணியில் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் தோழர்கள் பங்கேற்றனர்.

## அனைத்து மாவட்டங்களிலும்

# அரசின் உதவியோடு புத்தகக் கண்காட்சிகள்

## ஈரோடு புத்தகத் திருவிழாவை தொடங்கி வைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரை!






மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில் ஆண்டுதோறும் ஈரோடு புத்தகத்திருவிழா நடத்தப்பட்டு வருகிறது. இதன்படி 18ம் ஆண்டு 'ஈரோடு புத்தகத் திருவிழா ' ஈரோடு சிக்கய்ய நாயக்கர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

முன்னதாக, கடந்த 05.08.2022 அன்று மாலை இப்புத்தகக் கண்காட்சியை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையில் இருந்து காணொலி வாயிலாக தொடங்கி வைத்து உரையாற்றினார். அவர் பேசியதாவது:

ஈரோடு, நம் உணர்வோடு, உயிரோடு இரண்டற கலந்த ஊர். இந்த ஊர், தந்தை பெரியார் பிறந்த ஊர்; பேரறிஞர் அண்ணா வாழ்ந்த ஊர். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் குடியிருந்த ஊர். அறிவாசான் தந்தை பெரியார் பிறந்த ஊரில் ஓர் அறிவுத் திருவிழாவாக இந்த ஈரோடு புத்தகத் திருவிழாவை திறந்து வைப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

புத்தக வெளியீட்டு விழாக்களில் கலந்துக் கொள்வதும் புத்தகக் கண்காட்சிகளை தொடங்கி வைப்பதும் மகிழ்ச்சிக்குரியது. ஏனென்றால் அவை அறிவுத் திருவிழாக்கள். தமிழ் திருவிழாக்கள். தமிழின் பெருமையை அதன் சிறப்பை அனைவரும் உணர்ந்து கொள்வதற்கு இத்தகைய புத்தகத் திருவிழாக்களே அடித்தளமாக அமைகின்றன.

சென்னையை தொடர்ந்து ஒரு சில மாவட்டங்களில் தான் இதுபோல புத்தகக் கண்காட்சிகள் நடக்கின்றன. தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் அரசின் உதவியோடு இத்தகைய புத்தகக் கண்காட்சிகள் நடத்த உத்தரவிட்டுள்ளோம். அதற்காக இவ்வாண்டு ரூ.4 கோடியே 96 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பதிப்பாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையான 'புத்தகப் பூங்கா' அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பதிப்பகங்களோடு போட்டி போடுமளவுக்கு தமிழக அரசும் ஏராளமான புத்தகங்களை வெளியிட்டு வருகிறது. தமிழில் வெளியான மிகச் சிறந்த படைப்புகள் ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு மற்றும் கன்னடம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியாகியுள்ளன. இந்த மொழிபெயர்க்கும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது. அதே போல் பிற மொழிகளின் படைப்புகளும் தமிழில் கொண்டு வரப்படவுள்ளது. சங்க இலக்கிய நூல்கள் செம்பதிப்புகளாக கொண்டு வரப்படவுள்ளது. அதற்கானப் பணி நடந்து வருகிறது.

அறிவின் கூர்மைக்காக, சிந்தனையை வளர்த்துக் கொள்ள அறிவார்ந்த புத்தகங்களை வாசிக்க வேண்டும். புத்தகங்களை வழங்குவது ஒரு இயக்கமாகவே தமிழ்நாட்டில் மாறியிருக்கிறது. இது இன்னும் விரிவடைய வேண்டும்; வலுவடைய வேண்டும் என்பது தான் என்னுடைய விருப்பம். அறியாமை எனும் இருளில் தத்தளிப்பவர்களுக்கு ஒளி கொடுக்கும் அறிவுச் சுடர் தான் புத்தகங்கள். பொய்யும் புரட்டும் கலந்த பழமைவாதம் எனும் கடலில் சிக்கித் தவிக்காமல் நாம் கரை சேர உதவும் பகுத்தறிவுக் கப்பல்கள் தான் புத்தகங்கள். தமிழகத்தில் ஒருவரையொருவர் சந்திக்கும்போது புத்தகங்களை பரிமாறிக் கொள்ளும் பண்பாடு வளர வேண்டும். வாசிக்கும் பழக்கம் உள்ளவர்கள், அறிவார்ந்த நூல்களை நண்பர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள். சிந்தனையை தெளிவுப்படுத்தும் நூல்களை வாசிக்கத் தூண்டுங்கள். தமிழ் சமூகம் அறிவுச் சமூகம். கட்டுக்கதைகளையும் பொய்களையும் வென்ற சமூகம். தமிழகம் அறிவுப் புரட்சி மாநிலமாக, பகுத்தறிவுப் புரட்சி மாநிலமாக மாறுவதற்கு இது போன்ற புத்தகத் திருவிழாக்கள் அனைத்து நகரங்களிலும் நடைபெறவேண்டும். இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசுகையில் குறிப்பிட்டார்.

முன்னதாக, இத்தொடக்கவிழாவுக்கு ஈரோடு மாவட்ட ஆட்சியர் ஹெச்.கிருஷ்ணனுண்ணி தலைமை வகித்தார். தமிழக வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி விழாவிற்கு முன்னிலை வகித்து உரையாற்றினார். விழாவில் மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் வரவேற்றார். ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் இ.திருமகன் ஈவெரா, ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இப்புத்தகத்திருவிழாவில் 230க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்புத்தகத் திருவிழாவில் மாலையில் தினசரி சிந்தனை அரங்க நிகழ்வுகள் நடைபெற்று வருகிறது.


ஜி.டி.நாயுடு விருது

ஈரோடு புத்தகத் திருவிழாவையொட்டி ஆண்டுதோறும் மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில் , புதிய அறிவியல் கண்டுபிடிப்பாளர் ஒருவருக்கு ' அறிவியல் மேதை ஜி.டி.நாயுடு விருது' வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி இவ்வாண்டுக்கான ' அறிவியல் மேதை ஜி.டி.நாயுடு' விருது ஹைதராபாத் பல்கலைக்கழகத்தின் தாவர அறிவியல் துறையின் துணைப் பேராசிரியர் முனைவர் எம்.முத்தமிழரசனுக்கு வழங்கப்பட்டது.

# அடித்தளம் – மேற்கோப்பு



எஸ். தோதாத்ரி



**மார்க்சும், ஏங்கல்சும் தங்களது கொள்கையை விளக்கி பல கடிதங்கள் எழுதி உள்ளார்கள். இவற்றில் அவர்களது கொள்கை பற்றி முன் வைக்கப்பட்ட விமர்சனங்களுக்கு தெளிவான பதில்கள் உள்ளன. மார்க்சியம் பயில விரும்புபவர்கள் இவற்றையும் படிக்கவேண்டும். அதில் ஒன்று வரலாற்றுப் பொருள்முதல்வாதம் பற்றியது.**

பிளாக் என்பவருக்கு அவர் எழுதிய கடிதம் முக்கியமானது. இதில் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் தன்மை பற்றி ஏங்கல்ஸ் கூறுகிறார். அவரது கூற்றுப்படி வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என்பது இரு பகுதிகளாக அமைந்துள்ளது. ஒன்று அடிப்படை. இது பொருளாதாரம் சம்மந்தமானது. பொருள் உற்பத்தி நிகழும்பொழுது ஏற்படும் மனித உறவுகள் ஆகியன ஒரு பகுதி. இது அடிப்படை எனப்படுகிறது. இதுதான் நிர்ணயிக்கும் சக்தியாக உள்ளது.

மற்ற பகுதி மேற்கட்டுமானம் எனப்படுகிறது. இதில் சட்டம், தத்துவம், கலை, இலக்கியம், விஞ்ஞானம் போன்ற சிந்தனை வடிவங்கள் அடங்கும். மேலே கூறப்பட்ட அடிப்படையின் பிரதிபலிப்பு ஆகும்.

சிலர் அடிப்படையை மட்டும் அதிகமாக வலியுறுத்தி மேற்கோப்பை புறக்கணித்து விடுகின்றனர். இதன் காரணமாக வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என்பது சாரமற்ற பொருளாதார வாதமாக மாறிவிடுகிறது. இதன் விளைவாக பல குழப்பங்கள் ஏற்படுகின்றன. மார்க்சியம் வறட்டுத்தனமான ஒரு சூத்திரமாக மாற்றப்படுகிறது. இது தவறு என்று ஏங்கல்ஸ் கூறுகிறார். சிந்தனை வடிவங்கள் எல்லாம் உயிரோட்டம் உள்ளவை. இவற்றில் பல வடிவங்கள் அடிப்படையின் முன்னேற்றத்தைத் தடுக்கும் அல்லது தாமதப்படுத்தும் திறன்மிக்கது. சில நேரங்களில் இவை வரலாற்று வடிவங்களை உருவாக்கவும் செய்கின்றன. இதன் காரணமாக பல மாறுதல்களும் நிகழ்கின்றன.

சிலர் மேற்கோப்பை மட்டும் அதிகம் வலியுறுத்தி அடிப்படையின் சக்தியை புறக்கணிக்கவும் செய்கின்றனர். பொருளாதாரத்தை மட்டும் வலியுறுத்துவது எவ்வாறு வெறும் சூத்திரமாக இருக்கிறதோ அதே போன்று மேற்போக்கை மிகைப்படுத்துவதும் மார்க்சியத்தை திருத்தி கூறுவதாகும்.

இன்றைய பண்பாட்டு மார்க்சியவாதிகள் இதைத்தான் செய்கிறார்கள். பண்பாட்டு அம்சங்களை அதிகமாகக் கூறி கடைசியில் சில அடையாளங்களை மட்டும் வைத்துக்கொண்டு வரலாற்றை அணுகுவது சரியான பார்வை ஆகாது. இதுவும் நமது கொள்கையைச் சிதைத்துவிடும். ஏனென்றால் அடிப் படையில் இருந்து மேற்கோப்பை பிரிப்பது மேற்கோப்பின் சக்தியை உணராமல் அடிப்படையை மட்டும் காண்பது என்பது கொச்சையான மார்க்சியம் ஆகும். காரணம் இவை இரண்டும் ஒன்றுக்கொன்று பரஸ்பர உறவு உள்ளவை.

உதாரணமாக இனக்குழு மக்கள் கூட்டாக தொழில் செய் தார்கள். உணவை கூட்டாக பகிர்ந்து கொண்டார்கள். இதன் காரணமாக பகிர்ந்து உண்ணுதல் என்பது சார்ந்த எண்ணங்கள் தோன்றின. இதைத்தான் திருவள்ளுவர் ‘‘பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்’’ என்று குறிப்பிடுகிறார். இதனை சிறந்த அறம் என்று அவர் கூறுகிறார். இவை இரண்டும் ஒன்றுக்கொன்று பரஸ்பர உறவு உள்ளவை.

மேற்கோப்பு அடிப்படை ஆகியவற்றின் உறவு பற்றி கூறும் பொழுது, ஏங்கல்ஸ் பல்வேறு மக்களின் செயல்பாடுகளை குறிப்பிடுகிறார். சமுதாய அரங்கில் அடிப்படையானது இடையறாது செயல்பட்டுக் கொண்டே இருக்கும். மேற் கட்டுமானத்தின் பல்வேறு கூறுகள் இவற்றின் மீது செயல்படுகிறது.

எனவே ஏக காலத்தில் பல சக்திகள் செயல்படுவதை நாம் கவனிக்க வேண்டும். இந்த சக்திகளில் பல பிற்போக்கான வையாகவும், சில முற்போக்கானவையாகவும் இருக்கலாம். நமது வேலை பிற்போக்கான சக்திகளுக்கு இடமளிக்காமல் முற்போக்கான சக்திகளை வலுப்படுத்துவது ஆகும். இந்த சக்திகளின் செயல்பாட்டை வரைகணித நாற்கரம் (இந்த விசை பட்டால் இந்த முடிவுதான் வரும் என்பது போன்றது அல்ல. வேறுபட்டதாகவும் வரலாம்) என்பதற்கு ஒப்பிடுகிறார்.

பண்பாட்டுத் தளத்தின் செயல்பாடுகள் அடிப்படையை பாதிக்கும் என்று இருந்தாலும், அடிப்படையானது நிர்ணயிக்கும் சக்தியாக செயல்பட்டுக் கொண்டே தான் இருக்கும். இதன் செயல்பாடு சில சமயங்களில் வெளிப்படையாகத் தெரியும். சில சமயங்களில் வெளிப்படையாகத் தெரியாது.

உதாரணமாக இந்தியச் சமுதாயத்தை மாறாத் தன்மை உள்ள சமுதாயம் என்று அழைத்தனர். இந்த அமைப்பில் அடிப்படை மாற்றம் மெதுவாகவே நிகழ்ந்தது.

இதற்கு இங்கு உள்ள இயற்கைச்சூழல், எளிதான வாழ்க்கை வசதி ஆகியன முக்கிய காரணங்களாக இருந்தன. இவற்றை கட்டுக்குள் வைக்க இங்கு ஒரு மேற்கட்டுமானம் உருவாயிற்று. அது சாஸ்திரங்கள், சட்டம், தத்துவம், கலை, இலக்கியம் என்ற வடிவத்தில் உருவாயிற்று.

வெளித்தோற்றத்திற்கு இந்த மேற்கட்டுமானம் இந்த அடிப்படையை மாறாமல் வைத்திருந்தன என்று தோன்றினாலும் உண்மையில் அடிப்படை மாறாமல் இல்லை. அதன் மாற்றத்தை மேற்கட்டுமானத்தால் தடுக்கவும் முடியவில்லை. உதாரணமாக, சங்க காலத்தில் இருந்த இனக்குழு மக்களின் உற்பத்திமுறை, நிலவுடைமை சமுதாயமாக மாறும் பொழுது சங்ககாலத்தின் மேற் கட்டுமானத்தால் அதை தடுக்க முடியவில்லை.

அதேபோன்று தமிழ்நாட்டின் நிலவுடைமைச் சமுதாயம் ஐரோப்பியர்கள் வந்த சமயத்தில் தொழில்மயமாகும் முறைக்கு மாறும்போது நிலவுடைமைச் சமுதாயத்தின் மேற்கட்டுமானம் அதனை தடுக்க முடியவில்லை. அதே சமயத்தில் ஐரோப்பிய அரங்கில் இந்த மாறுதல் நிறைவாக இடம்பெற்றது. அடிமைச் சமுதாய அமைப்பு அங்கு விரைவாக தகர்ந்தது. இது நிலவுடமை சமுதாயத்திற்கு இடமளித்தது. இதன் விளைவாக அடிமைச் சமுதாயத்தின் சிந்தனை மரபுகள் பெரும் மாறுதலுக்கு உள்ளா யின. இதனை ஐரோப்பிய நிலவுடைமை அமைப்பு முதலாளித்துவ அமைப்புக்கு இடமளித்த போது ஏற்பட்ட மாறுதல்களில் தெளிவாகக் காணலாம்.

தொழிற் புரட்சி ஏற்பட்டு முதலாளித்துவ அமைப்பு வேகமாக வளர்ந்த போது நிலவுடமை சிந்தனைகள் அனைத்தும் கேள்விக்கு உள்ளாக்கப் பட்டு தூக்கி எறியப்பட்டன. இந்த சமுதாய மாறுதல்கள் நிகழும்போது மேற்கட்டுமானத்தால் அவற்றை தடுக்கவும் முடியவில்லை; அவற்றை நிர்ணயம் செய்யவும் முடியவில்லை.

எனவே தான் ஏங்கல்ஸ் மிக கவனமாக இறுதியாக அடிப் படைக்கு நிர்ணயிக்கும் சக்தி உண்டு என்று கூறுகிறார். மேற் கட்டுமானத்திற்கு அடிப்படை மாற்றங்களை தற்காலிகமாக தடுக்கும் திறன் உண்டு. அவற்றின் வடிவங்களை மாற்றும் திறனும் உண்டு. ஆகையினால் மேற்கட்டுமானத்தை மட்டுமே வைத்துக் கொண்டு அடிப்படையை புறக்கணிப்பது தவறு. அப்படி புறக்கணித்தால் மார்க்சியம் சாரமற்ற ஒன்றாகத்தான் இருக்கும்.

எனவே, அடிப்படை மாறுதலுக்கான போராட்டமும் நிகழ வேண்டும். மேற்கட்டுமானத்தின் சக்தியை புறக்கணிக்கவும் முடியாது. இவற்றைப் பிரித்து பொருளாதார நிர்ணயவாதம் என்றும், பண்பாட்டு மார்க்சியம் என்றும் காண்பது ஒரு இயங்கி யல் பார்வை ஆகாது.

இதைத்தான் மார்க்சும், ஏங்கெல்சும் அவர்களுடைய கடிதங் களில், பல நூல்களில் திரும்ப திரும்ப வலியுறுத்தி உள்ளனர். மார்க்சியத்தின் சாராம்சமான கருத்தை மார்க்ஸ் எழுதிய ‘‘அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு’’ என்ற நூலின் முன்னுரையில் மிகத் தெளிவாக காணலாம். பொருளாதார நிர்ணயவாதம் என்று கூறுவது எவ்வளவு சாரமற்ற கருத்தோ, அந்த அளவிற்கு பண்பாட்டு மார்க்சியம் என்றும் கூறுவதும் ஆகும்.

தொடர்புக்கு: **98947 83657**

# சிறுபான்மை ஆணைய அரசாணையை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏன்?



- நீ.சு.பெருமாள்

**இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி மொழிவாரி சிறுபான்மையினர் சிறப்பு அதிகாரியை நியமிக்க வேண்டும். அதாவது அரசியலமைப்புச் சட்டத்தின் விதி: 350B.யின் படி, மொழிவழி சிறுபான்மையினருக்கான சிறப்பு அதிகாரி ஒருவர் குடியரசு தலைவரால் நியமிக்கப்படுவார் என்றும் கூறப்பட்டுள்ளது.**

இந்த அரசியலமைப்பின் கீழ் மொழிவழி சிறுபான்மை யினருக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் தொடர்பான அனைத்து பிரச்சனைகளையும் ஆராய்ந்து, குடியரசுத் தலைவர் கவனத்திற்கு அறிக்கையாக வழங்க வேண்டும்.

நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையின் முன்பும் அந்த அறிக்கை வைக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுக்கும் அந்த அறிக்கையின் விபரங்கள் அனைத்தும் அனுப்ப வேண்டும். அதன் அடிப்படையில் சிறுபான்மையினர் நலன்கள் உறுதி செய்ய வேண்டும் என்றெல்லாம் அரசியலமைப்பு சொல்கிறது.

ஆனால், இந்த நடைமுறைகள் முறையாக தற்போது நடைபெறுவதில்லை. இந்திய மக்கள் தொகையில் 20 % கொண்ட இசுலாமியர்களின் பிரதிநிதியாக நாடாளுமன்றத்தில் எந்த உறுப்பினரும் தற்போது இல்லை. மாநிலங்களவையிலும் ஒரே ஒருவர்தான் இசுலாமியர். இந்த நிலையில், மொழிவாரி சிறுபான்மை மக்களின் நலன்களைப் பற்றி ஒன்றிய பா.ஜ.க அரசு எப்படி கவலைப்படும்.?

ஒரே நாடு, ஒற்றை கலாச்சாரம், ஒரே தேர்தல் என்றெல்லாம் முழக்கமிடும் பாஜக அரசிடம் சிறுபான்மை மக்கள் நிலை குறித்து என்ன பேச முடியும் ?

தமிழ்நாட்டில் வாழ்ந்து வருகின்ற மதம் மற்றும் மொழிவாரியான சிறுபான்மையினரின் நலன்களைப் பேணி காத்திட முதன் முதலில் 1989 ஆம் ஆண்டில் டிசம்பர் 13ல் அப்போதைய தமிழக முதல்வர் கலைஞர் மு கருணாநிதியின் உத்தரவுப்படி, மாநில சிறுபான்மையினர் ஆணையம் அமைக்கப்பட்டது. பின்னர் சட்டபூர்வ அதிகாரம் பெற்ற ஆணையமாக இருக்க வேண்டும் என்பதற்காக இதனை திருத்தி (Act 21 of 2010) மீண்டும் கலைஞர் ஆட்சியில் மேம்படுத்தப்பட்டது.

தமிழக முதல்வரால் திருத்தியமைக்கப்பட்ட மாநில சிறுபான்மை ஆணையத்தில் மொழிவாரி சிறுபான்மையினரும் சேர்க்கப்பட்டுள்ளனர். அதன்படி, தலைவரைத் தவிர்த்து ஆணையத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 9ல் இருந்து 13 ஆக உயர்த்தப்பட்டது. அதன் அடிப்படையில் குறிப்பாக 9 பேர் மத சிறுபான்மையினராகவும், 4 பேர் மொழிவாரி சிறுபான்மை யினராகவும் இடம் பெறுவர் எனவும் தமிழக அரசு சார்பில் அறிவிப்பு வெளியானது.

மேலும் அந்த அரசாணையில் , மதம் மற்றும் மொழிப் பிரிவைச் சேர்ந்த தலா ஒருவர் ஆணையத்தின் துணைத் தலைவராக இருப்பார். மொழி சிறுபான்மையினருக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்படும் என்றும், அதன்படி தமிழகத்தில் வாழ்ந்து வரும் தெலுங்கு, மராத்தி, உருது, கன்னடம், மலையாளம், சௌராஷ்டிரா ஆகிய மொழி பேசும் பிரிவைச் சேர்ந்தோர் 4 பேர் நியமிக்கப்பட உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

தமிழகத்தில் மதரீதியாக மட்டுமே சிறுபான்மை ஆணையத்தின் உறுப்பினராக இருந்து வந்த நிலையில் அனைத்துப் பகுதி மக்களின் கோரிக்கைகளும் தமிழக அரசின் கவனத்திற்கு வரவேண்டும் என்கிற வகையில் மொழிவாரி சிறுபான்மையினராக இருப்பவர்களையும் கவனத்தில் கொண்டு ஆணையத்தின் உறுப்பினர் எண்ணிக்கை அதிகரித்து அரசாணை வெளியிட்டது வரவேற்கத்தக்கது என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால் இந்த அறிவிப்பு வெளியாகி ஓராண்டு கடந்து விட்ட நிலையில் இன்றைக்கும் சிறுபான்மை ஆணையத்தின் உறுப்பினராக 9 பேர் மட்டுமே இருந்து வருகின்றனர்.

அதாவது மதரீதியான பிரநிதித்துவம் மட்டுமே உள்ளது. கிறித்தவம், இசுலாம், சீக்கியர், ஜெயின், பௌத்தம் ஆகிய மதங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஆணையமாகவே தொடர்கிறது.

கடந்த ஓராண்டுக்குள் வெளியிடப்பட்ட தமிழக அரசாணை களில் நிலுவையில் உள்ள அரசாணையாக சிறுபான்மை ஆணையத்தின் திருத்த அறிவிப்பு உள்ளது.

**இந்தி மொழி பேசுவோரும் தமிழகத்தில் சிறுபான்மை மக்களாக வாழ்ந்து வருகிறார்கள். எனவே அவர்களின் பிரதிநிதியும் மொழிவாரி சிறுபான்மை ஆணையத்தில் உறுப்பினராக சேர்க்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கை எழுந்த காரணத்தால் தான் இதனை தமிழக அரசு கிடப்பில் போட்டுவிட்டது என்றெல்லாம் இணையதளத்தில் கம்பு சுற்றி வருகின்றனர். அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், தமிழக முதல்வர் ஏற்கனவே வெளியிட்ட அரசாணையை நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும்.**

தூய இந்தி பேசுவோர் தாய்மொழியாகக் கொண்டோர் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லை. பல வட இந்திய மாநிலங்களில் உள்ள வட்டார மொழிகளைக் கொண்டு சமஸ்கிருதத்தின் குழந்தையாகத்தான் இந்தி உலவுகிறது. எனவே அந்த மொழியை சிறுபான்மை ஆணையத்தில் அமர வைக்க இயலாது என்பதே உண்மை நிலையாகும்.

தமிழகத்தில் காலம் காலமாக வாழ்ந்து வரும் மொழிவாரி சிறுபான்மை பிரிவு மக்கள் கல்வி மற்றும் பொருளாதார ரீதியாகவும் மேம்பட வணிகம் உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளை தமிழக அரசின் நேரடி கவனத்திற்கு கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் இந்த ஆணையத்தின் உறுப்பினர்களுக்கு கிடைக்கும் என்பதால் தமிழக அரசு இனியும் தாமதிக்காமல் சிறுபான்மை ஆணையத்தின் அறிவிப்பு நடைமுறையில் வருவதற்கான அறி விப்பை வெளியிட வேண்டும்.

தொடர்புக்கு: **9442678721**



# சங்கே முழங்கு!

## ‘ஜனசக்தி’ செய்தி எதிரொலி: சென்னை பல்கலைக்கழக உதவி பதிவாளர்கள் மீதான சாதிய வன்முறைக்கு முற்றுப்புள்ளி!


ஜனசக்தி

சென்னை பல்கலைக்கழகத்தில்

பற்றி எரியும் சாதி தீ



ஆர்.ஆர்.நகரில் சேவைரோடு அமைக்க வலியுறுத்தி கடையடைப்பு, மறியல்

தொடர்புக்கு: 99520 23935

சென்னை பல்கலைக்கழகத்தில் நீதிமன்ற உத்தரவுப்படி உதவி பதிவாளராக பதவி உயர்வு பெற்று பணியில் சேர்ந்த 17 தலித் உதவிப் பதிவாளர்களின் மீது தொடர்ந்து நடைபெற்று வந்த சாதிய வன்கொடுமையையும் அதனைக் கண்டும் காணாமல் அனுமதித்து வந்த பல்கலைக்கழக நிர்வாகத்தை கண்டித்து கடந்த வார ஜனசக்தியில் ஆய்வுக் கட்டுரை வெளியிட்டிருந்தோம்.

ஜனசக்தி வலைத்தளத்தில் வெளியிட்டிருந்த இக்கட்டுரை தமிழகத்தின் அனைத்துப் பல்கலைக்கழக பதிவாளர்கள், துணைவேந்தர்கள், பேராசிரியர்கள் உள்ளிட்ட சுமார் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட நபர்களுக்கு பகிரப்பட்டது.

ஜனசக்தி அச்சு ஊடகத்திலும் ஒரு பக்க கட்டுரையாக வெளியிடப்பட்டிருந்தது. இது சென்னை பல்கலைக்கழக நிர்வாகத்துக்கும் பேராசிரியர்கள் மத்தியிலும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது

இக்கட்டுரையில் கண்டிக்கப்பட்டிருந்த சாதிய வன்கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடிவு செய்த சென்னை பல்கலைக்கழக நிர்வாகம் பதிவாளர்களை உடனடியாக அழைத்து உங்கள் மீதான சாதிய சர்ச்சைகள் உடனடியாக நீக்கப்படும், பெயர்ப்பலகை வழங்கப்படும், அடையாள அட்டை மீண்டும் தரப்படும், சம்பளம் மற்றும் இதர பிரச்சினைகள் உடனடியாக ஒரு வார காலத்திற்குள் தீர்க்கப்படும் என்று உறுதி அளித்து இருந்தது.

ஆக.1 அன்று தலித் சமூகத்தைச் சார்ந்த 17 உதவிப் பதிவாளர்களுக்கும் அவர்களிடம் இருந்து வலுக் கட்டாயமாக பறிக்கப்பட்ட அடையாள அட்டைகள் திரும்ப வழங்கப்பட்டிருக்கின்றன.

மற்ற கோரிக்கைகள் உடனடியாக நிவர்த்தி செய்யப்படும் என்று உறுதி அளித்ததை தொடர்ந்து மகிழ்ச்சியும் திருப்தியும் கொண்ட உதவி பதிவாளர்கள், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநிலத் தலைவர் தோழர் நல்லகண்ணு மாநில செயலாளர் வழக்கறிஞர் கீ சு குமார் ஆகியோரை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்து சால்வை அணிவித்தார்கள்.

இதர கோரிக்கைகளும் விரைவில் நிறை வேற்றப் படவில்லை என்றால் ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் தோழர் நல்லகண்ணு தலைமையில் துணைவேந்தரை சந்தித்து கோரிக்கைகளை வலியுறுத்தும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலக்கை எட்டும் வரை போராட்டம் தொடரும்!

---

NEWAGE WEEKLY
Central Organ of the Communist Party of India

தலையங்கம்
(ஆக.7 - 13)

# இந்தியத் தாயின் மணிக்கொடிக்கு, செம்மாந்து வணக்கம் செலுத்துவோம்!

**நாட்டின் 75வது சுதந்திர தினத்தில் ஆளும் பாஜகவிடமிருந்து அசாதாரணமான முன்னெடுப்புக்களை இந்தியா சந்திக்கிறது. தேச விடுதலைப் போராட்டம் மற்றும் தேசியக் கொடிக்குத் தங்கள் விஸ்வாசத்தை வெளிப்படுத்த அவர்கள் கூடுதல் சிரமங்களை எடுத்துக் கொள்கிறார்கள்.**

ஆர்எஸ்எஸ் வழிநடத்தும் கும்பலின் பாஜகவும் சரி, அதன் முன்னோர்களும் சரி, மூவர்ணக் கொடியால் உத்வேகம் பெற்ற தேசிய விடுதலை இயக்கத்தில் எந்தப் பங்கும் வகித்ததில்லை, எந்தச் சிறு துரும்பையும் கிள்ளிப் போட்டதில்லை என்பதை, நமது வரலாற்றை ஓரளவு புரிந்து கொண்ட எவரும் நன்றாகவே அறிவார்கள். ஆர்எஸ்எஸ் அமைப்பின் கலாச்சார தேசியத் தத்துவத்தை ஏற்ற அந்த அனைத்துச் சக்திகளும் நாட்டின் விடுதலைக்கான வீரம் செறிந்த தேசியப் போராட்ட இயக்கங்களில் பங்கேற்காமல் விலகித் தனியே ஒதுங்கி நின்றன.

நாட்டு விடுதலை இயக்கத்தை அவர்கள் ஓர் அரசியல் நடவடிக்கை என முத்திரை குத்தி, தங்களின் கலாச்சார அமைப்பிற்கு அது குறித்த எந்த அக்கறையும் கவலையும் இல்லை என்றனர். எந்த அளவுக்கு அவர்கள் வறட்டுப் பிடிவாதக்காரர்கள் எனில், தேசியக் கொடியை அவர்கள் கையால்கூடத் தொடமாட்டார்கள். விடுதலைக்காக விண்ணில் உயர்ந்த மூவர்ணக்கொடி எழுப்பிய மக்கள் பேரெழுச்சியின் பக்கத்தில் ஆர்எஸ்எஸ் மற்றும் அதனைப் பின்பற்றுபவர்கள் ஒருபோதும் வந்தது இல்லை.

விடுதலை அடைந்த பல ஆண்டுகளுக்குப் பிறகும் அவர்களின் அணுகுமுறை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நலன்களுக்கு ஆதரவாக இருந்தது குறித்தும் அவர்களுக்குக் கூச்சம் ஏதுமில்லை. மக்கள் அனைவரும் ‘ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று’ பள்ளுப் பாடி, விடுதலை அடைந்த நாடு ஆகஸ்ட் 15ஐயும் மூவர்ணக் கொடியையும் கொண்டாடியபோது, அவர்களிடம் எந்த அசைவும் இல்லை. விடுதலை அடைந்து நீண்ட 52 ஆண்டுகளுக்கு ஆர்எஸ்எஸ் – பாஜக தங்கள் அலுவலகங்களின் அருகில் எங்கேயும் தேசியக் கொடியை ஏற்றிப் பறக்க விடுவது குறித்து ஒருபோதும் எண்ணியதும் இல்லை. அவர்கள் தங்களுக்கென்று அதற்கான வினோத விளக்கங்கள் வைத்திருந்தனர். இப்போது திடீர் ஞானம் வந்து உதித்ததுபோல ஆர்எஸ்எஸ் பாஜக அமைப்புகள் தேசியக் கொடியைக் கொண்டாடும் சாம்பியன்களாக வெறித்தனமான உற்சாகத்தில் காணப்படுகின்றன.


பிரதமர் தாமே முன்வந்து நாட்டு மக்களிடம் ஆகஸ்ட் 13ம் தேதியே சுதந்திரத் திருநாள் கொண்டாட்டங்களைத் தொடங்கும்படி வேண்டுகோள் விடுக்கிறார். இந்த வேண்டுகோளை ஜூலை 22ல் நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என்பதில் பிரதமர் மிக கவனமாக இருந்ததற்குக் காரணம் 1947ல் அதே நாளில்தான் மூவர்ணக் கொடி இந்திய தேசத்தின் தேசியக் கொடியாக அங்கீகரிக்கப்பட்டது. அனைத்து இந்தியர்களும் தங்கள் வீடுகளில் தேசியக் கொடியை ஏற்ற வேண்டும் என பிரதமர் விரும்புகிறார். அரசு தேசியக் கொடியைக் கொண் டாடப் பல்வேறு விழாக்களைத் திட்டமிட்டுள்ளது. ஏராளமான எண்ணிக்கையில் கொடியைத் தயாரிக்க வசதியாக இந்தியக் கொடி ஒழுங்குமுறை விதிகள் திருத்தப்பட்டுள்ளன. இந்தியக் கொடி மக்களுக்குத் தடையின்றி கிடைக்கப் பெருமளவில் பாலியெஸ்டர் துணி சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அவரது நிரூபிக்கப்பட்டத் திறன்களுடன் இந்திய விடுதலைப் போராட்ட இயக்கத்தின் புதிய வரலாற்றை எழுத அவர்கள் பலவிதச் சித்து விளையாடல்களில் இறங்கியுள்ளனர். வரலாற்றைப் புதிதாக அவர்கள் எழுதுவதன் நோக்கம், மெய்யான உண்மைகளை குழி தோண்டி மூடி மறைக்கவும், பாஜகவின் விருப்பத்திற்கிணங்க ஒரு புதிய வரலாற்றை படம் பிடித்துக் காட்டுவதற்கும்தான்.

விடுதலைப் போராட்டத்தின்போது காந்தி அடிகள் தலைமையில் காங்கிரஸ் 1931ல் தேசியப் பெருமித அடையாளமாக மூன்று வர்ணங்களால் ஆன கொடியை ஏற்றுக்கொண்ட போதிலிருந்தே மூவர்ணக் கொடி இந்திய இதயங்களில் நீங்கா இடம் பெற்றுவிட்டது. மூவர்ணக் கொடி குறித்த ஆர்எஸ்எஸ்ன் ஆட்சேபணையை அதன் நிறுவனத் தலைவர்கள் தொடக்கம் முதலே வெளிப்படுத்தினார்கள். தேசியக் கொடி எதிர்ப்பில் வசைமாறி கசப்பைக் கொட்டுவதில் ஆர்எஸ்எஸ்ன் ஹெக்டேவார் மற்றும் கோல்வால்கர் முன்னே நின்றனர்.

**நடுவே ‘ஓம்’ பொறிக்கப்பட்ட காவிக் கொடிக்காகப் பரிந்து அவர்கள் பிரச்சாரம் செய்தனர். அவர்களது அக்கொடிதான் இந்தியாவின் கலாச்சார உணர்வைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாக அவர்கள் வாதிட்டனர். அவர்களது கூற்றின்படி மகாபாரதக் காலத்திலிருந்தே இந்தியக் கோவில்களில் நடைமுறைப் பயன்பாட்டில் இருந்துவரும் காவிக் கொடிதான் தேசத்திற்கும் இயல்பான தேர்வாக இருக்க வேண்டும் என்றனர்.**

1931 ஜனவரியில் மூவர்ணக் கொடியை ஏற்றும்படி காங்கிரஸ் வேண்டுகோள் விடுத்தபோது ஆர்எஸ்எஸ் வெளிப்படையாக அதனை எதிர்த்தது. ஆர்எஸ்எஸ் அமைப்பின் முதலாவது (சர் சங் சாலக்) முதன்மைத் தலைவரான ஹெக்டேவார், அதனது அனைத்து ஷாகாக்களிலும் (கிளைகளிலும்) மூவர்ணக் கொடிக்குப் பதிலாகப் ‘பக்வா துவஜ்’ (காவிக் கொடி) ஏற்றும்படி குறிப்பாணை வெளியிட்டார். (பகவா துவஜ், பகவான் மகாதேவரைப் பின்பற்றியவர்களான மராட்டிய பேரரசின் கொடியாகும்.) வரலாறு நெடுக ஆர்எஸ்எஸ் அமைப்பு தேசிய இயக்கம் குறித்த தனது இணையான கருதுகோளை உயர்த்திப் பிடிப்பதில் ஆர்வம் உடையதாக இருந்தது; மேலும், தேசியக் கொடி மீதான வேறுபாடு அவர்களுக்கு மிகமிக முக்கியத்துவம் உடையதாக இருந்தது.

1946 ஜூலை14ல் நாக்பூரில் கூடிய ஸ்வயம் சேவக்குகளிடம் கோல்வால்கர் இவ்வாறு வற்புறுத்தினார்: “காவிக் கொடி மட்டும்தான் பாரதக் கலாச்சாரத்தை முழுமையாகப் பிரதிநிதித் துவப்படுத்தும். அது கடவுளின் உருவகம். ஒரு நாள், இறுதியில் இந்தத் தேசம் முழுவதும் தேசியக் கொடியின் முன் வணங்கும் என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.” மேலும் அவர் எழுதிய “சிந்தனைக் கொத்து” நூலில் கோல்வால்கர், ‘நிலைபெற்ற அடிப்படை’ என்ற தலைப்பிட்ட கட்டுரையில் அவர் எழுதினார்: “உதாரணத்திற்கு நமது தலைவர்கள் நமது நாட்டிற்கான புதிய கொடியை வடிவமைத்துள்ளார்கள். அவர்கள் ஏன் அப்படிச் செய்தார்கள்? அது வெறும் தட்டிக் கழித்தல் மற்றும் (அடுத்ததைப்) போலச்செய்தல்ஞ்அவ்வளவே. இந்தக் கொடி எவ்வாறு வந்தது? பிரெஞ்ச் புரட்சியின்போது பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் கொடியில் நீளவாட்டத்தில் மூன்று பட்டைகளை ‘சமத்துவம்’, ‘சகோதரத்துவம்’ மற்றும் ‘சுதந்திரம்’ என்ற மூன்று கருத்துக்களை வெளிப்படுத்த வைத்தார்கள் ஞ். இதனால் மூன்று பட்டைகள் நமது விடுதலை வீரர்களுக்கும் ஒரு வகையான ஈர்ப்பைத் தந்தது ஞ் எனவே காங்கிரஸ் அதை எடுத்துக் கொண்டது. அதன் பிறகுதான் பல்வேறு வகுப்பினரின் ஒற்றுமையை குங்குமப்பூ வண்ணம் இந்துக்களுக்கும், பச்சை வண்ணம் முஸ்லீம்களுக்கும், வெண்மை மற்ற அனைத்து வகுப்பினருக்கும் என அது சித்தரிப்பதாக விளக்கம் அளிக்கப்பட்டது. இந்துக்கள் அல்லாத வகுப்பினர்களில் முஸ்லீம்களை மட்டும் சிறப்பாகப் பெயரிட்டு குறிப்பிட்டதற்குக் காரணம், அநேகப் பெரும் தலைவர்கள் மனதில், முஸ்லீம் முக்கியமாகவும், அந்தப் பெயரைக் குறிப்பிடாமல் நமது தேசியம் முழுமை பெறாது என்றும் அவர்கள் நினைக்கிறார்கள்!”



மேற்கண்ட வகுப்புவாத விஷம் தோய்ந்த தவறான விளக்கத்தில் மூவர்ணம் குறித்த ஆர்எஸ்எஸ் அமைப்பின் அணுகுமுறை நன்கு தெரிகிறது. மூவர்ணக் கொடி பிரதிபலித்த எதார்த்த உண்மை மற்றும் தேசபக்தக் கருத்துக்களைக் காண மறுத்து தன் நெஞ்சறிய வேண்டுமென்றே அவர்கள் கண்களை மூடிக் கொள்கிறார்கள். வெறுப்புத் தத்துவத்தால் பயிற்சி அளிக்கப்பட்டு பாடம் படித்த அவர்கள் எப்போதும் தேசியக் கொடியின்பால் ஒருவகை பழிவாங்கல் உணர்வைக் கொண்டிருக்கிறார்கள்.

கொடியின் வண்ணங்கள் இந்தியச் சமூகத்தின் ‘வேற்று மையில் ஒற்றுமை’ என்பதைச் சுட்டிக்காட்டி ‘பாங்கின் எழுதித் திகழ்ந்து செய்ய பட்டொளி வீசிப் பறக்குது பாரீர்!’ அதன் இயல்பான, கலாச்சார மற்றும் தத்துவ விழுமியங்களின் அழகை மாபெரும் தேசத்தின் மாபெரும் மக்கள் தழுவி அதை தேசியக் கொடியில் உட்பொதிந்து பொறித்து வைத்தனர். (அதனால்தான் ‘தாயின் மணிக்கொடி, தாயின் மணிக்கொடி’ என்று உற்சாகமாகப் பாடத் தொடங்கினால், இயல்பாக அதைத் தொடர்ந்து ‘ஜெய் ஹிந்த், ஜெய் ஹிந்த்’ என்று சேர்ந்திசை முழக்கம் ஒலிக்கிறது.) தேசியக் கொடியால் பிரதிபலிக்கப்படும் இச்சமுதாய நெறிமுறை உணர்வுகளிலிருந்து ஆர்எஸ்எஸ்பாஜக எப்போதும் உணர்வு ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தன்னைத் தொலைவில் தள்ளி வைத்துக் கொள்கிறது.

ஆர்எஸ்எஸ் தலைமையகமான நாக்பூரில், இந்தியாவின் பிரதமராக அடல் பிகாரி வாஜ்பாய் இருந்தபோது, 2002ல்தான் அவர்கள் மூவர்ணக் கொடியை ஏற்றினார்கள். பல தருணங்களில் பாஜக தலைவர்கள் இந்தியத் கொடி நெறிமுறை விதியை மீறி தேசியக் கொடிக்கு அவமரியாதை இழைத்துள்ளார்கள். உபி முன்னாள் முதல்வர் மற்றும் ராஜஸ்தான் மாநில ஆளுநருமான கல்யாண் சிங் இறுதி யாத்திரையின்போது அவர் மீது போர்த்தப்பட்டு இருந்த தேசியக் கொடியைப் பாஜக கட்சிக் கொடிகளால் பாதி மறைத்தார்கள். இப்படி அப்பட்டமாக மீறியதைப் பிரதமர் உள்ளிட்ட ஆர்எஸ்எஸ்பாஜக பெரும் தலைவர்கள் எவரும் கண்டிக்க கவலைப்படவில்லை!

இப்போது இரவும் பகலும் அவர்கள் மூவர்ணக் கொடியைப் போற்றிப் புகழ்ந்து பாடுவதை மக்கள் வித்தியாசமாகப் பார்க்கிறார்கள். ஆர்எஸ்எஸ் பாஜக தங்கள் காவிக் கனவுகளை, இந்த நேரத்திற்கு அவர்கள், மூவர்ணக் கொடியால் மறைக்க விரும்புகிறார்கள். அவர்களைப் பொருத்தவரை எல்லாமும் பிரச்சாரத்திற்கானவை. தேசம், தேசிய நெறிமுறை உணர்வுகள், தேசியக் கொடி அனைத்துமே ஒரே நோக்கத்திற்காக அவர்களின் அரசியல் சித்து விளையாட்டு மற்றும் அதிகாரத்தில் அமர்ந்திருப்பது என்பதற்காகவே வெளிப்படுத்துகிறார்கள்!

தேசத்தின் மூவர்ணக் கொடி செம்மாந்து பட்டொளி வீசிப் பறக்கட்டும் என்றென்றும்!

அனைவருக்கும் 75வது சுதந்திர தின நல்வாழ்த்துகள்!

தமிழில்: **நீலகண்டன்**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில 25 வது மாநாடு திருப்பூர், தா.பாண்டியன் நகரில், சேதுராமன், டாக்டர் வே.துரை மாணிக்கம் அரங்கில் ஆகஸ்ட் 6ஆம் தேதி தொடங்கி 9ஆம் தேதி வரை நடைபெற்றது.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

- **தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்களுக்கு "தகைசால் தமிழர்" விருது வழங்கியமைக்கு நன்றி தெரிவித்து தீர்மானம்:**

தமிழ்நாட்டில் இடது சாரிகளின் முகமாகத் திகழும் மூத்த அரசியல் தலைவர், விடுதலைப் போராட்ட வீரர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர், அகில இந்திய கட்டுப்பாட்டுக் குழுத்தலைவர், தமிழ்மாநில விவசாயத் தொழிலாளர் சங்க பொதுச்செயலர் உள்ளிட்ட பொறுப்புக்களில் திறம்பட செயலாற்றியவர், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கதலைவர் தோழர் இரா.நல்லகண்ணு அவர்களுக்கு தமிழ்நாடு அரசு "தகை சால் தமிழர்" விருது வழங்கியுள்ளது. இந்தியாவுக்கு முழுச் சுதந்திரம் வேண்டும் என்றும், தமிழ்நாட்டுக்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்றும், அரசியல், அறிவியல், பொருளாதாரம் அனைத்தையும் கற்க, கற்பிக்க தமிழால் இயலும் என்றும் முதன்முதலில் முழங்கிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும், பேராசான் ஜீவா தொடங்கி தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும் அளப்பரிய தொண்டாற்றிய கம்யூனிஸ்ட்டுகளுக்கும் வழங்கப்பட்டதாகவே பொருளாகும்.

தகை சால் தமிழர் விருது வழங்கிய தமிழநாடு அரசுக்கும், முதல்வர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில 25வது மாநாடு நன்றி தெரிவிக்கிறது.

- **சிராவயலில் ஜீவா - காந்தி மணிமண்டபம்: அறிவித்ததற்கு நன்றி தெரிவித்து தீர்மானம்:**


அண்ணல் காந்தியடிகள், வர்ணாசிரமத்தை உடைத்தெறிந்து ஆசிரமம் நடத்தி வந்த பேராசான் ஜீவா அவர்களை தானே நேரில் சென்று சந்தித்து உரையாடிய சிவகங்கை மாவட்டம் சிராவயல் கிராமத்தில், அந்தச்சந்திப்பின் நினைவாக மணிமண்டபம் கட்ட வேண்டும் என்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கோரிக்கையை ஏற்று கட்சியின் மாநாட்டுக் கருத்தரங்கிலேயே தமிழ்நாடு அரசின் சார்பாக மணி மண்டபம் கட்டப்படும் என அறிவித்த மாண்புமிகு தமிழநாடு முதல்வர் அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில 25 வது மாநாடு நன்றி தெரிவித்துப் பாராட்டுகிறது.

- **75வது விடுதலை நாள்: ஆகஸ்ட் 9 முதல் 15 வரை தேசியக் கொடியேற்றம்**

இந்திய மக்கள் அரும்பெரும் தியாகம் செய்து பெற்றெடுத்த விடுதலையின் 75 ஆவது ஆண்டு விழா 2022 ஆகஸ்ட் 15 ல் வருகிறது. இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்காத ஆர்எஸ்எஸ்–பிஜேபி ஆளும் ஒன்றிய அரசு, மூவண்ணக் கொடியேற்றி ஆகஸ்ட் 13 முதல் 15ஆம் தேதி வரை விழா கொண்டாட அழைப்பு விடுத்துள்ளது.

இதற்காக பாரம்பரியமான கதர் கொடிக்குப் பதிலாக வெளி நாட்டில் தயாரிக்கப்பட்ட செயற்கை துணிக் கொடிகளை மோடி அரசு இறக்குமதி செய்துள்ளது. உடற்பயிற்சியின் போது மூவண்ணக் கொடியை தோளில் துண்டாகப் போட்டு, அதைக் கொண்டு முகம் துடைத்தவர் மோடி. நாக்பூர், ஆர்எஸ்எஸ் தலைமையகத்தில் இதுவரை மூவண்ணக் கொடியை ஏற்றியது இல்லை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தையே மாற்றி, மனுநீதியைச் செயல்படுத்த வேண்டும் என அந்த கட்சியின் பிரபல தலைவர்கள் பேசி வருகிறார்கள். ஒரு வகையில் இந்து, கிறிஸ்தவர், முஸ்லிம் ஒற்றுமையைக் குறிக்கும் வகையில் மூவண்ணம் தாங்கியது நமது தேசக் கொடி. அதற்கு நேர்மாறாக, ஆர்எஸ்எஸ்–பிஜேபி அரசு மத மோதல்களைத் திட்டமிட்டு உருவாக்கி, சிறுபான்மை யினரை அச்சுறுத்தலுக்கு ஆளாக்கிக் கொண்டிருக்கிறது. தனது சூழ்ச்சிகளை மறைப்பதற்கு தீவிர தேசியவாதம் பேசுகிறது.



இந்திய விடுதலைப் போராட்டத்தில் அளப்பரிய தியாகம் செய்து விடுதலையை வென்றெடுத்த, சிறை கொடுமைகளுக்கும் சித்திரவதைகளுக்கும் தூக்குத் தண்டனைக்கும் படுகொலைகளுக்கும் ஆளான மாமனிதர்களின் கட்சியான இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தனது பெருமிதமிக்க பாரம்பரியத்தோடு வெள்ளையனே வெளியேறு இயக்கம் தொடங்கிய ஆகஸ்ட் 9ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 15ஆம் தேதி வரை, வீடுகள், அலுவலகங்கள் அனைத்திலும் தேசிய கொடியேற்றி கொண்டாடுவது என முடிவு செய்கிறது. விடுதலைப் போராட்ட நோக்கங்களுக்கு ஏற்ப மீண்டும் இந்திய நாட்டைக் கட்டியமைக்க உறுதியேற்பது என இந்த மாநாடு முடிவு செய்கிறது.

- **அரசியல் தீர்மானம்**

ஒன்றிய அரசு ஆட்சி அதிகாரத்திலிருந்து ஆர்எஸ்எஸ் –பிஜேபியை அகற்ற மதச்சார்பற்ற ஜனநாயக இடதுசாரி சக்திகள் ஒன்றுபடுவோம்! தமிழகத்தை விழிப்புடன் காப்போம்!

இந்தியா விடுதலை பெற்று 75 ஆண்டுகள் நிறைவுறுகின்றன. இந்திய விடுதலைப் போராட்டம் 90 ஆண்டுகள் நடைபெற்றது. ஆயிரம் ஆயிரம் வீரர்களின் ரத்தத்தால் விடுதலை பெற்றது மட்டுமல்ல; 565 சமஸ்தானங்களாக வெள்ளையன் விட்டு சென்ற பின்பு அதை இந்தியா என்ற பன்மைப் பண்பாடுகள் கொண்ட நாடாக இந்திய விடுதலை இயக்கம்தான் உருவாக்கியது. இந்த விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்காதது மட்டுமின்றி, பிரிட்டிஷ்காரனுக்கு துதி பாடி போராட்டத்தை காட்டி கொடுத்த ஆர்.எஸ்.எஸ்.–பா.ஜ.க. கடந்த எட்டு ஆண்டுகளாக இந்தியாவில் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறது.

வீட்டுக்கு 15 லட்ச ரூபாய் தருவேன், ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை தருவேன், கருப்பு பணத்தை முற்றாக ஒழிப்பேன், டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பை உயர்த்தி காட்டுவேன் என்றெல்லாம் ஏராளமாக வாய்ச்சவடால் அடித்து ஆட்சிக்கு வந்த மோடி இவற்றில் எதையும் நிறைவேற்றவில்லை. மாறாக இந்திய மக்கள் கடந்த 75 ஆண்டுகளாக முதலீடு செய்து உருவாக்கி வைத்திருந்த அரும்பெரும் பொதுத் துறை நிறுவனங்கள் எல்லாம், அவருடைய கார்ப்பரேட் எஜமானர்களுக்கு, ஏறத்தாழ இலவசமாக அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.



உலகமே பொருளாதார நெருக்கடியில் தள்ளாடிக் கொண்டிருந்த நேரத்தில், இந்தியாவைக் காப்பாற்றிய தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளையும், காப்பீடு நிறுவனங்களையும், பொதுத்துறை நிறுவனங்களையும் பாஜக ஆட்சி விற்றுக் கொண்டிருக்கிறது. காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான் என்ற கூற்றுக்கு மாறாக இந்தியாவின் செல்வங்களை கார்ப்பரேட்டுகள் தான் உருவாக்கினார்கள் என்று வெட்கமில்லாமல் இந்தியப் பிரதமர் பேசுகிறார். இந்திய ராணுவத்திற்கு டாங்குகள் பீரங்கிகள் துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களையும், கருவிகளையும், உடைகளையும் செய்து தரும் 41 பாதுகாப்புத் துறை தொழிற்சாலைகளை 100% அந்நிய முதலீட்டுக்கு திறந்து விட்டிருக்கிறார். நிலக்கரி கனிமவளச் சுரங்கங்கள், ரயில்கள், ரயில் நிலையங்கள், விமான நிலையங்கள், ஏர் இந்தியா விமானங்கள், துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் என்று இந்தியாவின் உட்கட்டமைப்புக்கு தேவையான, பொதுமக்களின் வரிப்பணத்தால் உருவாக்கப்பட்ட,அத்தனை பொதுச் சொத்துகளும் அநியாயமாக கார்ப்பரேட்டுகளிடம் விற்கப்படுகின்றன.

அவர்களது பகாசுர நிறுவனங்களின் லாப வேட்டைக் காடாக இந்தியாவை மாற்றுவதற்கு வசதியாக சிறு குறு நடுத்தர தொழில்கள் அனைத்தையும் பாஜக அரசு ஒழித்து கட்டிக் கொண்டிருக்கிறது.

பலமுனை வரியை நீக்கி, ஒரு முனை வரியாக்கிக் குறைக்கிறோம் என்ற பெயரில் ஜிஎஸ்டி வரி கொண்டுவரப்பட்டது. உலக நாடுகளில் எங்கும் இல்லாத அளவுக்கு 28%சத வரி விதிக்கப்படுகிறது. பெட்ரோல், டீசல் விலை அனேகமாக

# திருப்பூர் மாநாட்டில் மக்களைக் கவர்ந்த கலை நிகழ்ச்சிகள்

**திருப்பூரில் நடைபெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 25 வது மாநில மாநாட்டின் பகுதியாக, கலைக்குழுக்கள் பாரம்பரிய கலைகளை நிகழ்த்தி மக்களை ஈர்த்தனர்.**

மாநாட்டின் தொடக்க நாளான ஆகஸ்ட் 6 பிற்பகலில் சமூக நல்லிணக்கப் பாதுகாப்பு மற்றும் மாநில உரிமை மீட்பு மாநாடு எழுச்சியுடன் நடைபெற்றது. முன்னதாக கோவை நிமிர்வு பறை இசைக்குழுவினரின் தப்பாட்ட நிகழ்ச்சியை பார்வையாளர்கள் ரசித்துப் பாராட்டினர். திருச்சி பாரதி கலைக்குழுவினர் அரசியல் நையாண்டியுடன் பாடல்களைப் பாடினர்.

ஆகஸ்ட் 7 ம் நாள் மாலை கலை இலக்கியப் பெருமன்றத்தின் கோவைத் தோழர்கள் யாரித்துள்ள " காதலன் காரல் மார்க்ஸ்" குறும்படம் திரையிடப்பட்டது. பார்வையாளர்களை ஜெர்மனிக்கும், லண்டனுக்கும் கொண்டு சென்று மார்க்ஸ் ஜென்னி இணையரின் துயர வாழ்வையும் அதனைக் கடந்து நின்ற அவர்களுடைய காதல் பிணைப்பையும், மார்க்ஸ் எங்கல்ஸ் லட்சிய நட்பையும் காட்சிப்படுத்தியதை கண்ணீர் மல்க பார்த்து பாராட்டினர்.

அடுத்து, தர்மபுரி பாப்பாரப்பட்டி ஆண்டவன் பம்பை இசைக்குழு நிகழ்ச்சி நாம் அதிகம் கண்டிராத ஒன்று. ஆம். இரு சிறிய தோல் வாத்தியங்களைத் தோளில் தொங்கவிட்டுக் கொண்டு 10 வயது முதல் 15 வயதேயான சிறுவர்கள் கலைஞர் ஆண்டவன் ஜதி சொல்ல, தாளலயத்துடன் அடித்து பார்வையாளர்களைக் கவர்ந்தனர்.

அடுத்து, தமிழ்நாடு கலை இலக்கியப்பெருமன்றத்தின் பெரும்





பொக்கிஷமாக விளங்கி மறைந்த கலைமாமணி கைலாசமூர்த்தியின் மாணவர் முனைவர் சங்கர் குழுவினரின் ஒயிலாட்டம், மயிலாட்டம், கரகாட்டம், கட்டைக்காலாட்டம் ஆகியவை பிரம்மிக்க வைத்தன.

கல்லூரி மாணவர்கள், ஆய்வு மாணவர்களடங்கிய கலைக்குழுவின் அர்ப்பணிப்பு, தோழர் கைலாசமூர்த்தி உடலால் மறைந்தாலும், அவர் வளர்த்த கலையால் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதை உணர்த்தியது.

ஆகஸ்ட் 8, மாநாட்டு அரங்கில் திருச்சி பாரதி கலைக்குழு, பாடகர்கள் நீடாமங்கலம் சந்திரசேகரன், சாத்தூர் சாமிநாதன், கள்ளக்குறிச்சி ஜெய்சி, கோவை எல்.ஜான் ஆகியோர் பாடல்களைப் பாடினர்.

மாநாட்டின் இறுதிநாளான ஆகஸ்ட் 9 அன்று நடைபெற்ற பிரம்மாண்டமான செம்படை பேரணி பத்மினி கார்டனை அடைவதற்கு முன்பே திடல் நிரம்பிவிட்டிருக்க, பாரதி கலைக் குழு, நிமிர்வு பறையிசைக்குழு, திரையிசை புகழ் அறந்தை பாவா ஆகியோரின் இசை நிகழ்வுகளைக் கண்டும் கேட்டும் மக்கள் ஆரவாரத்துடன் கையொலி எழுப்பி பாராட்டினர்.

கூடுதல் சிறப்பாக, பேரணியில் பங்கேற்று வந்த சிவகங்கை தப்பாட்டக்குழு மற்றும், திருவாரூர் மாவட்ட பறையிசைக்குழு ஆகியோரின் பறையிசையும் மக்களைக் கவர்ந்தன.

சுருங்கக்கூறின், பாரம்பரியக் கலைகளைப் பேணுவதில், கலையுணர்வை வளர்ப்பதில் பேராசான் ஜீவா தொடங்கி வைத்த மரபை செங்கொடி இயக்கம் அறுபடாமல் தொடர்கிறது என்பதை மாநாட்டின் கலை நிகழ்வுகள் பறைசாற்றின என்றால் மிகையல்ல.




# தீர்மானங்கள்

தினந்தோறும் ஏற்றப்படுகிறது. இது அத்தியாவசிய பொருட்கள் உட்பட அனைத்து பொருட்களின் விலை உயர்வுக்கும் காரணமாக அமைகிறது.

செலவுகள் அதிகரித்துக் கொண்டே சென்றாலும் பெரும்பாலான குடும்பங்களில் வருவாய் குறைகிறது. உலகம் முழுவதும் கொரனோ தொற்று பரவிக் கொண்டிருக்கும் போது, அமெரிக்க ஜனாதிபதிக்கு விழா எடுப்பதில் மும்முரமாக இருந்த மோடி அரசு, காலத்தில் நடவடிக்கை எடுக்கத் தவறியதால் பல்லாயிரக்கணக்கான உயிர்களை இழந்தோம்., கால அவகாசம் தராமல், சிந்தனையே இன்றி அறிவித்த திடீர் பொது முடக்கம், சாதாரண குடும்பங்களின் வாழ்வாதாரத்தை சீர்குலைத்துப் போட்டிருக்கிறது. புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் தூரத்தில் இருந்த தமது இருப்பிடங்களை நோக்கி, உணவின்றி கால் பாதம் வெடிக்க, நடந்து கொண்டிருக்க, அவர்கள் மீது தடியடி நடத்தியது வெட்கித் தலை குனியச் செய்யும் செயலாகும்.

விவசாயிகளிடம் இருந்து நிலத்தை பறித்து, கார்ப்பரேட் மயமாக்கும் வகையில் மோடி அரசு மூன்று வேளாண் சட்டங்களைக் கொண்டு வந்தது. விவசாயிகள் ஓராண்டு காலம் போராடி, 700க்கும் மேற்பட்ட உயிர்களை பலி கொடுத்த பின்பு, சட்டத்தை திரும்ப பெற்றது. அச்சட்டங்களின் சாரத்தை அழிக்காமலே நடைமுறைப்படுத்தும் கொடுமை நடந்து கொண்டிருக்கிறது. இந்திய வேளாண் துறையில் விதை தயாரிப்பு, இடுபொருள்களான உரம் பூச்சிச்கொல்லி மருந்து உற்பத்தி ஆகியவை ஏற்கனவே பெரிய கார்ப்பரேட் கம்பெனிகளின் கைகளுக்கு சென்று விட்டது. தற்போது வேளாண் பொருள் சந்தை, கார்ப்பரேட்டுகளுக்கு மாற்றப்பட்டுக் கொண்டுள்ளது. விவசாயிகளுக்கான மானியங்கள் ஒழிக்கப்படுகின்றன. சுவாமிநாதன் குழு பரிந்துரை அமலாக்குவது பற்றி அரசு சிந்திக்கவில்லை. உற்பத்தி பொருள்களுக்கு கட்டுப்படியான விலை கிடைக்காமல், கடன் வலையில் சிக்கி விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் நிலை இன்னும் தொடர்கிறது.

இந்தியாவில் நிரந்தர தொழிலாளர் என்ற முறைமையையே அழிக்கும் வகையில், தொழிலாளர்களின் வேலைக்கும் ஊதியத்துக்குமான உத்தரவாதத்தை மோடி அரசு பறிக்கிறது. 150 ஆண்டு காலம் போராடி பெற்ற தொழிலாளர் உரிமைகளை பறிக்கும் வகையில், 44 தொழிலாளர் சட்டங்களை 4 சட்டங்களாக சுருக்கி இருக்கிறது. தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதி, ஓய்வூதியம், இஎஸ்ஐ மருத்துவ வசதி ஆகியவையும் சிக்கலுக்கு உள்ளாக்கப்படுகின்றன. எந்தச் சட்டத்தின் பயனையும் நுகர முடியாத வகையில் காண்ட்ராக்ட் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுகிறது. ராணுவத்திலேயே நான்கு ஆண்டுகள் காண்ட்ராக்ட்டில் பணிபுரியும் 'அக்கினி பாத்' திட்டத்தை கொண்டு வந்து விட்டனர். அதைப் பெருமைப்படுத்தி, தேச பக்தி என்பதை போன்ற மாயையை கட்டமைத்து வருகிறார்கள். இதனை எதிர்த்த இந்திய நாட்டின் இளைஞர்கள் மீது கொடூரமான தடியடி, துப்பாக்கிச் சூடு மற்றும் சிறை தண்டனைகள் விதிக்கப்பட்டன. கட்டிட மற்றும் அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்கு ஓரளவு சமூக பாதுகாப்பு தருவதற்கு துவக்கப்பட்ட மாநில நல வாரியங்களை ஒன்றிய அரசு சீர்குலைக்கிறது. வாரியங்களுக்காக வசூலிக்கப்படும் நல வரியையும் ஒன்றிய அரசே எடுத்துச் செல்லும் வகையில் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எதிர்கால தலைமுறையை உருவாக்கும் கல்வி, வணிக மயமாக்கப்பட்டு விட்டது. பணம் இருந்தால் தான் படிப்பு என்ற நிலை படிப்படியாக நுழைக்கப்படுகிறது. இதையும் தாண்டிப் படித்தும் வரும் சாதாரண குடும்பத்து மாணவர்களை உயர்கல்விக்கு செல்ல விடாமல் வடிகட்ட, நீட் தேர்வு கொண்டு வரப்பட்டுள்ளது.

வரலாற்றை திரித்தும், அறிவியல் உணர்வை மழுங்கடிக்கவும் பாடப்புத்தகங்களை ஆர்எஸ்எஸ் பிஜேபி அரசு திருத்துகிறது. பள்ளிப் பாடம் பயிலும் இளம் குருத்துகளின் மனதில் நஞ்சை விதைத்து வருகிறார்கள்.

மருத்துவம் சாதாரணமானவர்களின் கைகளுக்கு எட்டாத செலவாக மாறிவிட்டது. அரசு மருத்துவமனைகளைத் தாழ்த்தி, கார்ப்பரேட் மருத்துவமனைகள் ஆதிக்கம் செலுத்தும் நிலை உருவாகியுள்ளது. அரசின் கைகளில் மருத்துவம் இல்லாவிட்டால் எத்தகைய கொடுமைகள் அரங்கேறும் என்பதை கொரோனா தொற்று நிரூபித்து விட்டது. ஆனாலும் மருத்துவத்தை மக்களுக்கு வழங்கும் கடமையை மோடி அரசு கைகழுவிக் கொண்டே இருக்கிறது.

மாநில அரசுகளை பொம்மைகள் ஆக்கி, அதிகாரங்கள் அனைத்தையும் ஒன்றிய அரசிடம் குவித்து கொண்டிருக்கிறார்கள். மாநிலங்களின் உரிமைகள் தொடர்ந்து பறிக்கப்படுகின்றன. நாட்டின் பன்முக கலாச்சாரம் பெரும் ஆபத்துக்கு உள்ளாக்கப் படுகிறது. இந்தி மொழியை திணிக்க கடும் அழுத்தம் செலுத் தப்பட்டு வருகிறது.

ஆர்.எஸ்.எஸ் செல்வாக்கு, நகர்ப்புற, மேல்சாதி, குட்டி முதலாளித்துவ வர்க்கம், வணிகர்கள்,வர்த்தகர்கள் போன்றோர் மத்தியில் இருந்தது. ஆனால், அவர்கள் கிட்டத்தட்ட சமூகத்தில் அனைத்து பிரிவுகளிலும் கால நேரத்தையும், காசு பணத்தையும் பயன்படுத்தி ஊடுருவியுள்ளனர். ஆர்எஸ்எஸ் சார்புடைய அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மாணவர் அமைப்புகள் சுறுசுறுப்பாக செயல்பட்டு ஆர்எஸ்எஸ் சித்தாந்தத்தையும் செயல் திட்டத்தையும் வேகமாக பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். ராணுவம் மற்றும் நீதித்துறையிலும் ஆர்எஸ்எஸ் செல்வாக்கைக் காண முடியும். கிராமப்புறங்களிலும் கூட, ஆர்எஸ்எஸ் ஆதரவுடன் பல்வேறு சமூக மற்றும் அரசியல் அமைப்புகள் விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளர்களையும் தமக்குப் பின்னால் அணி திரட்ட வேலை செய்கின்றன.

பா.ஜ., ஆட்சிக்கு வந்த பின், ஆர்எஸ்எஸ் ஆட்கள் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் சென்றடைவதற்கு அரசு திட்டங்கள் அவர்களுக்கு பயன்படும் வழியாகவும் மாறியுள்ளன. அவர்களது வேலையை சட்டபூர்வமாகவே அதிக வீச்சோடு செய்வதற்கு, திட்டப் பணிகள் துணை புரிகின்றன. ஆர்.எஸ்.எஸ் சமூக ரீதியாக பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த மாறுபட்ட குழுக்களை ஒன்றிணைப்பதற்கு இந்துத்துவா கருத்தியலையும் ஒரு கருவி ஆக்குகிறது.பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட சாதியினரை, இந்து ஒற்றுமை என்ற பெரிய அடையாளத்துக்குள்ளாக ஒன்று சேர்த்து விட அவர்கள் நினைக்கிறார்கள். அதே நேரத்தில் சாதியப் படிநிலை, சாதியின் பெயரால் பாரபட்சம் ஆகியவற்றுக்கு பாதிப்பு ஏற்படாமலும் பார்த்து இருக்கிறார்கள்.

வெவ்வேறு மதத்தினர்களுக்கிடையிலான திருமணத்தைத் தடை செய்தல், மதமாற்ற தடைச் சட்டம் கொண்டு வருதல், மத நம்பிக்கையின் அடிப்படையில் மனிதர்கிடையே பாரபட்சம் காட்டுதல் போன்ற பழமைவாத சமூக செயல் திட்டத்தை ஒன்றிய அரசும் பாஜக ஆளும் மாநிலங்களில் அரசுகளும் மேற்கொண்டு வருகின்றன. இந்த வேலைகளில் எல்லாம், ஆர்எஸ்எஸின் மேல் சாதி, ஆணாதிக்க மனநிலை வெளிப்படையாக தெரிகிறது.

இவற்றையெல்லாம் எதிர்த்து ஆட்சேபனைக் குரல் எழுப்பினால் அவர்கள் மீது தேச விரோதிகள், அர்பன் நக்சல்கள், தேசத் துரோகிகள் என்றெல்லாம் முத்திரை குத்தப்படுகிறது. யாரையும் கைது செய்து விசாரணை இன்றி சிறையில் வைத்திருக்கும் வகையில் ஊபா சட்டம் செயலில் இருக்கிறது. எழுத்தாளர்கள் ஊடகவியலாளர்கள் சமூக செயற்பாட்டாளர்கள் அறிவுஜீவிகள் உள்ளிட்ட மேலோர்கள் வெஞ்சிறையில் வாட்டப்பட்டு வருகின்றனர்.

அரசின் செயல்பாட்டை கண்காணித்து திருத்த வேண்டிய நீதிமன்றங்கள் உள்ளிட்ட ஜனநாயக நிறுவனங்களை பிஜேபி அரசு முடக்கிவிட்டது. காட்சி மற்றும் அச்சு ஊடகங்களில் பெரும்பாலானவை பெரும் கார்ப்பரேட்டுகளின் கைகளில் இருக்கின்றன. மாற்றுக் குரல் கொடுக்கும் எஞ்சிய ஊடகங்களை பிஜேபி அரசு அச்சுறுத்தி அடிபணியச் செய்கிறது.

நாடு ஜனநாயக பாதையில் இருந்து திசை திருப்பப்பட்டு சர்வாதிகாரத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. குறிப்பாக இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்த பின்பு ஆர் எஸ் எஸ் பாஜகவின் பாசிச நடவடிக்கைகள் பெருமளவு கூடிக் கொண்டுள்ளன.

இதனை எதிர்கொள்ள அனைத்து மதச்சார்பற்ற, ஜனநாயக, இடதுசாரி கட்சிகளின் பரந்த கூட்டணி உருவாக்குவதும், நிலை நிறுத்துவதும் அவசர அவசிய தேவையாகிறது. அதன் மூலம் தான், பிஜேபி ஆர்எஸ்எஸ்ஸின் ஆட்சிக்கு எதிராக ஒரு மதச்சார்பற்ற ஜனநாயக மாற்றை உருவாக்க இயலும்.

இத்தகைய சூழலில், தமிழ்நாட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அங்கம் வகிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணி 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சியையும் அதன் கூட்டணியையும் தமிழகத்தில் தோற்கடித்து மாபெரும் வெற்றியை பெற்றது. 2021 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலும் மகத்தான வெற்றியை பெற்றது. தற்போது ஆட்சியில் உள்ள திராவிட முன்னேற்ற கழகம், பாரதிய ஜனதா கட்சியின் கொள்கைகளையும் ஒன்றிய அரசின் பல்வேறு மத சார்பு கொள்கைகளையும், எதிர்ப்பதில் உறுதியாக உள்ளது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இந்த கூட்டணியை பலப்படுத்துவதற்கும் வருகின்ற 2024 நாடாளுமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி மற்றும் அதன் கூட்டணியை தமிழ்நாட்டில் தோற்கடிக்கவும் தமிழ்நாட்டின் அனைத்து பகுதி மக்களின் நலன்களை காப்பதற்கு முன்னின்று போராடுவதற்கும் அனைத்து பகுதி மக்களையும் இம்மாநாடு அறைகூவி அழைக்கின்றது.

*– மற்ற தீர்மானங்கள் வரும் இதழில் வெளிவரும்.*


# மாநில மாநாட்டில் நியூ செஞ்சுரி நிறுவனத்தின் 12 புதிய நூல்கள் வெளியீடு!











திருப்பூரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது தமிழ் மாநில மாநாட்டில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் 12 புதிய நூல்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச்செயலாளர் டி.ராஜா ஆக.7 அன்று வெளியிட்டார். நூல்களைப் பெற்றுக்கெண்டவர்களின் விவரம்: இரா.எட்வின் எழுதிய 'எது கல்வி?' என்ற நூலை எஸ்.குணசேகரன் எக்ஸ்.எம்.எல்.ஏ. பெற்றுக்கொண்டார்.

ராஜ் கௌதமன் மொழிபெயர்த்த 'பாலியல் அரசியல்' (கேற் மில்லற்) என்ற நூலை பத்மாவதி எக்ஸ்.எம்.எல்.ஏ. பெற்றுக்கொண்டார்.

சண்முகம் சரவணன் தொகுத்த கார்த்திகேசு 'சிவத்தம்பி படைப்புகள்' என்ற நூலை வை.சிவபுண்ணியம் எக்ஸ்.எம்.எல்.ஏ. பெற்றுக்கொண்டார்.

செ.தி.ஞானகுரு எழுதிய 'அறியப்படாத இந்து மதம்' என்ற நூலை த.இந்திரஜித் பெற்றுக்கொண்டார். க.பழனித்துரை எழுதிய 'தமிழ்நாட்டின் மூன்றடுக்கு புதிய பஞ்சாயத்து அரசாங்கம்' என்ற நூலை கோ.பழனிச்சாமி எக்ஸ்.எம்.எல்.ஏ. பெற்றுக்கொண்டார்.

பொ.முத்துக்குமரன், ம.சாலமன் பெர்னாட்ஷா ஆகியோர் எழுதிய 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி...' என்ற நூலை டி.எம்.மூர்த்தி பெற்றுக்கொண்டார். ப.கு.ராஜன் எழுதிய 'தமிழகம் சமூக பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றமும் சுற்றுச்சூழலும்' என்ற நூலை சி.எச். வெங்கடாசலம் பெற்றுக்கொண்டார்.

கே.பி.கூத்தலிங்கம் மொழிபெயர்த்த 'மக்களாட்சி என்பது சடங்குகளின் தொகுப்பு (தாரிக் அலி)' என்ற நூலை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ் பெற்றுக்கொண்டார்.

ந.முருகேசபாண்டியன் எழுதிய 'பழந்தமிழ் இலக்கியத்தில் விளிம்புநிலையினர்' என்ற நூலை த.லெனின் பெற்றுக்கொண்டார்.

இரா.முத்தரசன் எழுதிய 'பாசறை நோக்கிப் படைகள் திரும்பட்டும்' என்ற நூலை மு.வீரபாண்டியன் பெற்றுக்கொண்டார். பொன்னீலன், பெ.கணபதி ஆகியோர் எழுதிய 'தோழர் கே.பாலதண்டாயுதம் வாழ்க்கை வரலாறு' என்ற நூலை நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் பெற்றுக்கொண்டார்.

மு.வீரபாண்டியன் எழுதிய 'தமிழ் மொழியும் அனுசரிப்பும்' என்ற நூலை கண்ணகி பெற்றுக் கொண்டார்.

# செங்கடலாக மாறிய திருப்பூர் மாநகர்



பின்னலாடைக்கு உலகப் பெயர் பெற்ற திருப்பூர் மாநகர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில மாநாட்டை ஒட்டி சுவரெழுத்துக்களாலும், செங்கொடி தோரணங்களாலும், செவ்வாடை அணிந்து செங்கடலாக மாறியிருந்தது.

மாநாட்டுக்கான வரவேற்புக்குழு மிகச் சிறப்பாக சுற்றிச் சுழன்று பணியாற்றி 25வது மாநில மாநாட்டை வெள்ளி விழா மாநாடாக சிறப்பு சேர்த்திருந்தது.

திருப்பூர் தாராபுரம் சாலையில் உள்ள வித்தியா கார்த்திக் திருமண மண்டப முகப்பில் மிகப் பிரமாண்டமான நுழைவு வாயிலில் 25 கட்சி கொடிகளுடன் கம்யூனிஸ இயக்க சர்வதேச தலைவர்களின் படங்கள் அலங்கரிக்கப்பட்டு வந்தோரையெல்லாம் வரவேற்றது.

தோழர்கள் வீ.ராஜமோகன், எஸ்.அழகுமுத்துப் பாண்டியன், ஆர்.ஏ.கோவிந்தராஜன், ஆர்.சுசீலா நினைவு நுழைவு வாயிலில், தோழர்கள் பி.சேதுராமன் வே.துரைமாணிக்கம் நினைவு அரங்கத்திற்குள் பிரதிநிதித் தோழர்கள், மாநாட்டு பங்கேற்பாளர்கள் வரவேற்கப்பட்டனர்.

முதல் நாளான ஆகஸ்ட் 6 சனிக்கிழமை காலை 7.00 மணி முதல் பிரதிநிதிகள் பதிவு தொடங்கியது. காலை 9.00 மணிக்கு மாநாட்டு நிகழ்வு தொடங்கப்பட்டது. தலைமைக்குழு உறுப்பினர்களாக ஜி.பழனிச்சாமி, க.சந்தானம், எம்.ஆறுமுகம், மு.கண்ணகி, க.பாரதி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

24வது மாநாடு நடந்து முடிந்த மன்னார்குடியிலிருந்து கொண்டு வரப்பட்ட செங்கொடியையும், கோவை சின்னியம்பாளையம் தியாகிகள், சேலம் சிறைத் தியாகிகள், ஈரோடு தியாகி எம்.நாகப்பன், கே.எஸ்.நாச்சிமுத்து, எஸ்.பி.வெங்கடாச்சலம், பெருந்துறை பி.கே.நல்லப்பன், திருப்பூர் புறநகர் அவினாசி ஐ.எம்.ஷெரீப், ஊத்துக்குளி என்.கே.பழனிச்சாமி, பல்லடம் ராமசாமி, பொங்கலூர் கே.தங்கமுத்து, உடுமலை என்.ஆர்.பழனிச்சாமி, திருமுருகன்பூண்டி சி.சுப்பிரமணியம், திருப்பூர் மாநகர் முதல் மண்டலம் எம்.எஸ்.நாச்சிமுத்து, பாட்டையப்பன், ப.இளம்பரிதி, இரண்டாம் மண்டலம் தியாகி பழனிச்சாமி, மா.நடராஜன், மூன்றாவது மண்டலம் எஸ்.ஆறுமுகம், டிப்டாப் முத்து, நான்காவது மண்டலம் டிப்டாப் முருகேஷ், ஆண்டிப்பாளையம் நாச்சிமுத்து, மக்கலம் ராமசாமி, மதுரை பி.சேதுராமன், தோழர் தா.பாண்டியன் ஆகியோரது நினைவுச் சுடரையும் மாநாட்டுக் குழு தோழர்கள் பெற்றுக் கொண்டு சிறப்பித்தனர்.

25வது மாநில மாநாட்டுக் கொடியை மூத்த தோழர் இரா.நல்லகண்ணு 25 வெடி முழக்கங்களுடன் ஏற்றிவைத்து உரை நிகழ்த்தினார். ஜி.காளியப்பன் தியாகச் சுடரை ஏற்றி வைத்தார். மு.வீரபாண்டியன் அஞ்சலி தீர்மானத்தை வாசித்தார்.

தோழர்கள் தா.பாண்டியன், குருதாஸ் குப்தா, முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி, தோழர்கள் சமீன் பைசி, டாக்டர் வே.துரைமாணிக்கம், பி.சேதுராமன், வீ.ராஜமோகன், எஸ்.அழகுமுத்துபாண்டியன், சுசீலா, அரங்க சின்னப்பா, எம்.எஸ்.தாவூத், குணாளன், எஸ்.ஆர்.பெருமாள், கே.ஏ.கோவிந்தசாமி, டாக்டர் வெ.ஜீவானந்தம், மதி சோழர், கு.ராமதாஸ் மற்றும் மறைந்த கட்சியின் முன்னணி தோழர்களுக்கும், சமூக செயல்பாட்டாளர்களுக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்மாநிலக் குழுவும், 25வது மாநாடும் தங்கள் ஆழ்ந்த அஞ்சலியைத் தெரிவித்துக் கொண்டது.

பிரதிநிதிகள் மாநாட்டை தேசியப் பொதுச் செயலாளர் டி.ராஜா தொடக்கி வைத்து வரைவு அரசியல் தீர்மான விளக்க உரையை வழங்கினார். அரசியல், அமைப்பு நிலை, நிதி நிலை அறிக்கைகளை இரா.முத்தரசனும், வேலை அறிக்கையை மு.வீரபாண்டியனும் வாசித்தனர்.

தேசிய செயலாளர்கள் அமர்ஜித் கவுர், டாக்டர் கே.நாராயணா, பினாய் விஸ்வம் எம்.பி. மற்றும் ஆனிராஜா உள்ளிட்டோர் அரசியல் விளக்கவுரை நிகழ்த்தி மாநாட்டை வழிநடத்தினர். தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் சி.எச்.வெங்கடாச்சலம், தேசியக்குழு உறுப்பினர் ஸ்ரீகுமார் ஆகியோர் ஆங்கில உரையை மொழியாக்கம் செய்தனர்.

மதிய உணவு இடைவேலைக்குப் பிறகு மாலை 4.00 மணிக்கு சமூக நல்லிணக்க பாதுகாப்பு மற்றும் மாநில உரிமைகள் மீட்பு எழுச்சி பொது மாநாடு தொடங்கியது. இரா.நல்லக்கண்ணு தலைமை ஏற்றிட, கே.சுப்பராயன் வரவேற்று பேசினார். கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா தொடக்க உரையாற்றினார்.

தி.மு.க. தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் நிறைவுப் பேருரை நிகழ்த்தினார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் கே.எஸ்.அழகிரி, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை கோ எம்.பி., மார்க்சிஸ் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், வி.சி.க. தலைவர் தொல்.திருமாவளவன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொய்தீன், கொங்கு மக்கள் தேசியக் கட்சியின் தலைவர் ஈ.ஆர். ஈஸ்வரன் எம்.எல்.ஏ., மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ., தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர் தி.வேல்முருகன் எம்.எல்.ஏ., இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் – விடுதலை) மாநிலச் செயலாளர் என்.கே.நடராஜன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புதுச்சேரி பிரதேச செயலாளர் அ.மு.சலீம், சி.மகேந்திரன், மு.வீரபாண்டியன், எம்.ஆறுமுகம் உள்ளிட்ட தலைவர்கள் சிறப்புரையாற்றினர். மாநாட்டு வரவேற்புக்குழு செயலாளர் எம்.ரவி நன்றி கூறினார்.

பொதுமாநாட்டிற்குப் பிறகு கலைக்குழு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இரண்டாம் நாள் ஆகஸ்ட் 7 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு தேசிய செயலாளர்கள் அமர்ஜித் கவுர், டாக்டர் நாராயணா, பினாய் விஸ்வம் எம்.பி., மற்றும் ஆணி ராஜா உள்ளிட்டோரின் வாழ்த்துரையோடு மாநாடு தொடங்கியது. சி.எச்.வெங்கடாச்சலம் ஆங்கில உரையை மொழியாக்கம் செய்தார். அரசியல் அறிக்கையின் மீதான விவாதங்களும், கருத்துரைகளும் நடைந்தேறின. பிரதிநிதிகள் விவாதங்களில் பங்கேற்று பேசினர். மாலை கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மூன்றாம்நாள் ஆகஸ்ட் 8 திங்கட்கிழமை காலை அரசியல் அறிக்கை மீதான தொகுப்புரைகள், கணக்கு தனிக்கை குழு அறிக்கை, கட்டுப்பாட்டுக்குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டன. 77 பேர் விவாதத்தில் பங்கேற்று பேசினர்.

பிற்பகலில் புதிய மாநிலக்குழு உறுப்பினர்களின் தேர்வும், புதிய கட்சிக் கட்டுப்பாட்டுக் குழு தேர்வும், அகில இந்திய மாநாட்டு பிரதிநிதிகள் தேர்வும் நடைபெற்றன.

தகுதி ஆய்வுக்குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநாட்டு நிறைவுப் பேருரைகள் நிகழ்த்தப்பட்டு சர்வதேச கீதம் இசைக்கப்பட்டு மாநாடு நிறைவு பெற்றது. மாலையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நான்காம் நாள் ஆகஸ்ட் 9 செவ்வாய்கிழமை காலை 10.00 மணிக்கு மாநாடு கூடி தகுதி ஆய்வுக்குழு அறிக்கை மீதான விவாதம் நடைபெற்றது. 101 பேர் கொண்ட மாநிலக்குழு உறுப்பினர்கள் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்டு, மாநிலச் செயலாளராக இரா.முத்தரசன் தேர்வு செய்யப்பட்டார்.

மாநாட்டை சிறப்பாக நடத்திட்ட வரவேற்புக்குழுவுக்கும், அனைத்து மாவட்டப் பிரதிநிதிகளுக்கும், பங்கேற்பாளர்களுக்கும் நன்றி தெரிவித்து மாநாட்டு நிகழ்வுகளை இரா.முத்தரசன் நிறைவு செய்தார்.

பிற்பகல் 3.00 மணிக்கு ஸ்ரீசக்தி திரையரங்கம் அருகிலிருந்து செம்படைப் பேரணி, மாவட்ட வாரியாக தொண்டர்கள் பேரணி, மகளிர், சிறார் பேரணி, கலை நிகழ்ச்சிகள் பேரணி என திருப்பூர் நொய்யல் ஆற்றுப்பாலம் முதல் பொதுக்கூட்டம் நடைபெறும் காங்கேயம் சாலை பத்மினி கார்டன் மைதானம் வரை லட்சக்கணக்கானோர் கலந்து கொண்டு எழுச்சி முழக்கமிட்டு ஊர்வலமாக வந்தனர்.

மாலை 6.00 மணிக்கு தொடங்கிய பொதுக்கூட்ட நிகழ்வில் கே.சுப்பராயன் எம்.பி. தலைமையில் டி.ராஜா, இரா. நல்லகண்ணு, அமர்ஜித் கவுர், கே.நாராயணா, பினாய் விஸ்வம் எம்.பி. ஆனி ராஜா, இரா.முத்தரசன் உள்ளிட்ட தலைவர்கள் சிறப்புரையாற்றினர்.

தோழர் இரா.முத்தரசன் மூன்றாவது முறையாக தேர்வு செய்யப்பட்டதற்கு வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டது.

# சிலிண்டர், ஜிஎஸ்டி வரி உயர்வு, மின்சார கட்டண உயர்வைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

விருதுநகர்: ஒன்றியஅரசின் கேஸ் சிலிண்டர், ஜிஎஸ்டி வரி உயர்வு, மாநில அரசின் மின்சார கட்டண உயர்வைக் கண்டித்து விருநகர் மாவட்டத்தில் ஐந்து மையங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

ஸ்ரீவில்லிபுத்தூரில் கோவிந்தன், பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ ஆகியோர் தலைமை வகித்தனர். மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ்எம்எல்ஏ, ஒன்றிய செயலாளர் பலவேசம், நகர செயலாளர் மூர்த்தி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். இராஜபாளையத்தில் நகர செயலாளர் விஜயன் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, நிர்வாககுழு உறுப்பினர் இரவி, ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி, மேற்கு ஒன்றிய செயலாளர் கணேசமூர்த்தி, கிழக்கு ஒன்றிய செயலாளர் இராமச்சந்திரன், வெம்பக்கோட்டை ஒன்றிய செயலாளர் நடராஜன் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். சாத்தூரில் நகர செயலாளர் ஜான்ராஜா தலைமை வகித்தார். எஸ்.பழனிக்குமார், வட்ட செயலாளர் சுவாமிநாதன், துணை செயலாளர் பாண்டி, முத்துவைரம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



அருப்புக்கோட்டையில் திருச்சுழி ஒன்றிய செயலாளர் செல்வம், அருப்புகோட்டை ஒன்றிய செயலாளர் முனிய சாமி ஆகியோர் தலைமை வகித்தனர். மாநில குழு உறுப்பினர் செந்தில்குமார், துணை செயலாளர்கள் பெரியண்ணன், கரியமால், ஞானகுமார், காரியாபட்டி வேலுச்சாமி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். விருதுநகரில் நகர செயலாளர் முத்துக்குமார் தலைமை வகித்தார். மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், ஒன்றிய செயலாளர் சக்கணன், மாதர்சங்க மாவட்ட செயலாளர் மாரீஸ்வரி, மாவட்டகுழு உறுப்பினர் இராஜேந்திரன் ,இளைஞர்மன்ற வடிவேல்முருகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**புரசைவாக்கம்:** புரசைவாக்கம் வெள்ளாதத் தெரு அருகே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய சென்னை மாவட்டக்குழு மத்திய மாநில அரசுகளின் ஜி.எஸ்.டி.வரி உயர்வு; சொத்து வரி உயர்வு; மின் கட்டண உயர்வு மற்றும் காஸ் சிலிண்டர்; பெட்ரோல்; டீசல் உட்பட அத்தியாவசிய பொருட்கள் விலை உயர்வு போன்ற மக்கள் விரோத கொள்கைக்கு எதிராக எழுச்சிமிகு கண்டன ஆர்ப்பாட்டம் ஆக.2 அன்று நடைபெற்றது.

மாவட்டச் செயலர் ப.கருணாநிதி ஆர்ப்பாட்டத்தை தலைமை யேற்று துவக்கி வைத்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், மத்திய, மாநில அரசுகளின் மக்கள் விரேரத கொள்கைக்கு எதிராக எழுச்சியுரையாற்றினார்.




இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட இணைச் செயலாளர்கள் பி.மாரியப்பன்; ரஞ்சித், பொருளாளர் வரதன், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் ரமேஷ், இந்திய தேசிய மாதர் சம்மேளன மாவட்டச் செயலாளர் தனலட்சுமி, கட்சியின் அம்பத்தூர் பகுதிக்குழு செயலர் விஜயகுமார் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

ஆவடி, HVFEU/AIDEF சங்க முன்னாள் பொதுச் செயலாளர் பு.கி. மூர்த்தி மத்திய, மாநில அரசுகளின் மக்கள் விரோத கொள்கைக்கு எதிரான எழுச்சிகர கண்டன முழக்கங்கள் எழுப்பினார். மத்திய சென்னை மாவட்ட செயலர் ப.கருணாநிதி, மத்திய மாநில அரசுகளின் ஜி.எஸ்.டி. வரி விதிப்புக் கொள்ளைக்கு எதிராக நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தின் முக்கியத்துவம் குறித்தும், மக்கள் விரோத பாசிச கொள்கைகளின் கடும் விளைவுகள் குறித்தும் எடுத்துரைத்து தலைமை உரையை நிறைவு செய்தார்.

கண்டன முழக்க ஆர்ப்பாட்டத்தில் மத்திய சென்னை மாவட்டத்தின் இயக்கத் தோழர்கள் அனைவரும் பங்கு கொண்டு முழங்கினர். பின் எழும்பூர் பகுதிச் செயலாளர் இளங்கோ நன்றி கூறினார்.



எஸ்.காசிவிஸ்வநாதன்

# விடுதலைப் போரில் கம்யூனிஸ்டுகள்



**1857 சிப்பாய்க் கலகம் என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்ற சொற்களை இந்தியாவின் முதல் சுதந்திரப் போர் என்று மாமேதை கார்ல் மார்க்ஸ் வரையறுத்தார். அவர் காலத்தில் யாரும் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும் இன்றைய காலத்தில் இத்தலைப்பு பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுவதாகிவிட்டது.**

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி 1885 ம் ஆண்டு தொடங்கப் பட்டது. 20 ஆண்டுகள் கழித்து திலகரும் வ.உ.சி.யும் பாரதியும் பல தேச பக்தர்களும் சுயராஜ்யம் எனது பிறப்புரிமை என்று முழங்கினாலும் அதிகாரப்பூர்வமாக பூரண சுதந்திரத்தை காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளவில்லை. நாற்பத்தி நான்கு ஆண்டுகள் கழித்து 1929 ஆம் ஆண்டு தான் இந்தியா முழு விடுதலை பெற வேண்டும் என்ற தீர்மானம் லாகூர் காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. பல குழுக்கள் பல போராட்டங்களை கடுமையான அடக்குமுறைக்கு நடுவில் நடத்தினர். இன்னல்கள், அடக்குமுறைகள், சதி வழக்குகள், அந்தமான் சிறைக்கு நாடு கடத்தப்படுதல் என இந்திய தேச விடுதலைக்காக உயிர் கொடுத்த பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

வீர காவியங்கள் பலவற்றைப் படைத்த இவர்களின் தியாகம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

1920 அக்டோபர் 31 இல் தொடங்கப்பட்ட ஏஐடியுசி இந்திய நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் தொழிலாளர்களை அணி திரட்டியது. தொழிற்சங்கத் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டு மீரட் சதி வழக்கு என்ற கொடிய சதி வழக்கை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் போட்டது.

1925 டிசம்பர் 26ம் நாள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கான்பூரில் அதிகாரபூர்வமாக தொடங்கப்பட்டது.

1921ம் ஆண்டு அகமதாபாத் காங்கிரஸ் மாநாட்டில் தான் இந்தியாவின் முழுவிடுதலைக்கான தீர்மானம் முன்மொழியப்பட்டது. இதனை முன்மொழிந்த ஹஸ்ரத் மொஹானியும் வழிமொழிந்த சுவாமி குமாரனந்த் ஆகிய இருவரும் கம்யூனிஸ்டுகள் ஆவர். வரலாற்றில் முதன்முறையாக முன்மொழியப்பட்ட பூரண சுதந்திரம் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

1922 ஆம் ஆண்டு காங்கிரஸ் மாநாட்டில் முழு சுதந்திரம் தீர்மானத்தை கம்யூனிஸ்டுகள் சிங்காரவேலர், எஸ்.ஏ.டாங்கே ஆகியோர் முன்வைத்தனர். காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளவில்லை.

1925ஆம் ஆண்டு கவுகாத்தி காங்கிரஸ் மாநாட்டில் கம்யூனிஸ்ட் வீரேந்திர சட்டோபாத்தியாயா முழு சுதந்திரம் தீர்மானத்தை முன்வைத்தார்; ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

சென்னையில் 1927ல் நடைபெற்ற காங்கிரஸ் கட்சிமாநாட்டில் முழு விடுதலைக்கான தீர்மானத்தை கம்யூனிஸ்டுகள் ஜோக்லேக்கர், நிம்கர், வ.சுப்பையா ஆகியோரால் முன்மொழியப்பட்டது. தீர்மானம் நிறைவேறியது. ஆனால் அச்சமயம் காந்திஜி மற்றும் பிற தலைவர்கள் வெளியே சென்றுவிட்டனர். ஆதலால் இந்தத் தீர்மானம் செயல்படுத்தத் தேவையில்லை என ஒதுக்கி வைக்கப்பட்டது.

1928ம் ஆண்டு கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டு பந்தலுக்கு கம்யூனிஸ்டுகளும் கம்யூனிஸ்டுகள் உள்ளடக்கிய தொழிலாளர் விவசாயிகள் கட்சியினர் 50,000 திரண்டனர். பூரண சுதந்திரத்திற்கு முழக்கமிட்டனர். ஜவகர்லால் நேருவின் தந்தை மோதிலால் நேரு அனுமதியின் பேரில் பந்தலில் கூட்டம் போட்டு முழு சுதந்திரம் தீர்மானத்தை நிறைவேற்றி தலைவரிடம் சமர்ப்பித்து விட்டு அமைதியாக கலைந்து சென்றுவிட்டனர். நேருஜி தீர்மானத்தை முன்மொழிந்தார். காந்தி இத்தீர்மானத்தை எதிர்க்கவில்லை. காலம் கனியவில்லை என்று அடுத்த காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றலாம் என்று கூறினார். 1927 இல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த கம்யூனிஸ்ட் தலைவர்களான முசாபர் அகமது, டாங்கே ஆகியோரை காந்திஜி மீரத் சிறையில் நேரில் சென்று சந்தித்தார்.

முழு விடுதலை தீர்மானம் அடுத்து வரும் காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றப்படுவது உறுதி. நமக்கு இடையில் இருந்து வேறுபாடு நீங்கி விடும். நாம் ஒன்று சேர்ந்து இயக்கம் நடத்தலாம் என்று காந்தி கூறினார். கம்யூனிஸ்ட் தலைவர்கள் ஒத்துழையாமை இயக்கம் நடைபெறுகின்ற காலத்தில் சௌரி சௌரா சம்பவத்திற்குப் பிறகு தாங்கள் போராட்டத்தை திரும்ப பெற்றுக் கொண்டீர்கள். அதுபோன்று போராட்டத்தை திடீர் வாபஸ் செய்வீர்களா'' என்று கேட்டார்கள். சிறிது யோசித்த காந்தி '' இல்லை'' என்று பதிலளித்தார்.

இதன் பின்னர் 1929 டிசம்பர் 31ம் நாள் லாகூர் காங்கிரஸ் மாநாட்டில் முழு விடுதலை தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அத்தோடு ஜனவரி 26ம் தேதியை விடுதலை கோரிக்கை நாளாக நாடகம் அனுஷ்டிப்பது என்றும் முடிவாயிற்று. எனவேதான் இந்தியா விடுதலைப் பெற்ற பின்பும் ஜனவரி 26ம் நாள் குடியரசு தினமாக கொண்டாடப்படுகிறது. இந்த உண்மைகளை காங்கிரஸ் ஆட்சியின் போது வரலாற்றாசிரியர்கள் பலர் குறிப்பிடுவதில்லை.

இந்திய நாட்டின் விடுதலைக்கு போராட போராடிய கம்யூனிஸ்டுகளின் மீது பல சதி வழக்குகள் புனையப்பட்டன. வேறு எந்த கட்சியினரும் இவ்வளவு சதி வழக்குகளை சந்தித்த பெருமை கிடையாது.

1921–22ல் மூன்று பெஷாவார் சதி வழக்குகள் ஒன்றன்பின் ஒன்றாக போடப்பட்டன. 1923ல் லாகூர் சதி வழக்கு, 1924இல் கான்பூர் போல்ஷ்விக் சதி வழக்கு, 1928ல் மீரட் சதி வழக்கு தமிழ்நாட்டில் சென்னை கோவை நெல்லை மதுரை கம்யூனிஸ்ட் சதி வழக்குகள் என பல வழக்குகளைத் தொடுத்து கம்யூனிஸ்ட் தலைவர்களை கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டனர். பலர் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அமைக்கப்பட்ட காலத்திலிருந்தே சட்டபூர்வமாக செயலாற்ற அனுமதிக்கப்படவில்லை. கம்யூனிஸ்ட் என்றால் பிரிட்டிஷ் அரசு கைது செய்து காரணம் காட்டாமல் சிறையில் அடைத்தனர். கம்யூனிச கொள்கைகளை கண்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அஞ்சி நடுங்கியது. இதன்விளைவாக 1934ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சியை அதிகாரபூர்வமாக தடை செய்தது. இரண்டாவது உலக யுத்தம் 1939ல் தொடங்கியது. உலகெங்குமுள்ள கம்யூனிஸ்டுகளும் பாசிச எதிர்ப்பு யுத்தத்தில் நேச நாடுகளின் அணியை ஆதரித்த காரணத்தினால் 1942இல் இந்த தடை நீக்கம்செய்யப் பட்டது.

ஹைதராபாத் நிஜாம் மன்னனை எதிர்த்த தெலுங்கானா போராட்டத்தில் மூவாயிரத்திற்கும் அதிகமான கம்யூனிஸ்டுகளும் விவசாயிகளும் இன்னுயிரை தியாகம் செய்தனர். புன்னப்புரா – வயலார் போராட்டங்களில் 500க்கும் மேற்பட்ட இளம் தோழர்கள் பிரிட்டிஷ் ராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர். காவிரி பாயும் தஞ்சைத் தரணியில் நூற்றுக்கணக்கான தோழர்கள் நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்த போராட்டத்தில் செத்து விழுந்தனர்.

பம்பாயில் கடற்படை வீரர்களின் கழகத்தை ஆதரித்து 1946 பிப்ரவரி 23, 24 தேதிகளில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் 270 செத்து மடிந்தனர். பல்லாயிரம் பேர் காயமடைந்தனர்.

விடுதலைப் போரில் வீர காவியம் படைத்தது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பாட்டாளி வர்க்கம்.. இந்திய விடுதலைக்கு தலைமை தாங்கிய காந்தி மகானை சுட்டுக்கொன்ற சதிகார கும்பலின் கைகளில் ஆட்சியதிகாரம்.

75 வது விடுதலைத் திருநாளில் தேசம் காக்க சபதமேற்போம்.

தொடர்புக்கு: **94435 27486**



## பி.எஸ்.என்.எல். ஊழியர்களை மிரட்டிய தொலைத்தொடர்பு அமைச்சர்

# ஏஐடியூசி கண்டனம்!

ஏஐடியூசியின் அகில இந்திய செயற்குழு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

பிடிஐ செய்தி நிறுவனச் செய்தியின்படி ஒன்றிய தொலைத் தொடர்பு அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பி.எஸ்.என்.எல். ஊழியர்களுக்கு மிகக் கடுமையான செய்திகளில் ஒன்றைத் தெரிவித்துள்ளார் அதாவது, பி.எஸ்.என்.எல். ஊழியர்கள் திறன்படப் பணியாற்றி அடுத்த 24 மாதங்களில் நிறுவனத்தை மாற்றி உயர்த்த வேண்டிய நேரமிது அல்லது வி.ஆர்.எஸ். வாங்கிக் கொண்டு வீட்டுக்குச் சென்று விடுங்கள்'' எனக் கூறியுள்ளார்.

மேலும் அவர், ''இட்ட பணியைச் செய் அல்லது ஒழிந்து போ'' (**'perform or perish'**) என்பது புதிய நடைமுறை, இனி புதிய இயல்பான நடைமுறையும் ஆகும்; மற்றும் யாரெல்லாம் வி.ஆர்.எஸ். வாங்கத் தயங்குகிறார்களோ அவர்கள் விதி 56 ஜெ விதியைப் பயன்படுத்திக் கட்டாயமாகப் பணி ஒய்வு செய்யப்படுவார்கள் என்றும் அறிவித்தார்.

வெள்ளைக்காரர்கள், 'நாய்க்குப் பைத்தியம் எனப் பட்டம் கட்டு, பின் நாயைச் சுட்டுக் கொல்' எனக் கூறியதைப் போல, இது காலம் காலமாகப் பின்பற்றப்படும் தந்திரம்!

பி.எஸ்.என்.எல். நிறுவனத்தைக் கடுமையாகத் தாக்கியது அடுத்தடுத்து வந்த ஒன்றிய அரசுகள், அவைதாம் டி.ஓ.டி. துறையிலிருந்து பிரித்து பி.எஸ்.என்.எல். நிறுவனம் உருவாக்கப்பட்டபோது அவைகள் அளித்த தங்கள் சொந்த வார்த்தைகளையே காப்பாற்றாது, தொலைத்தொடர்பில் இயங்குவதற்கான சமதளத்தை வழங்க மறுத்தது; அதே நேரத்தில் தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்களை மொபைல் சேவை வழங்கவும், அந்நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய பெரும் நிலுவைத் தொகைகளைப் பெற நீண்ட கால அவகாசம் அளித்தும், அந்த நிலுவைக்குச் சமமான வீடியோகான் பங்குகளை வாங்குவது போன்ற சலுகைகளையும் அது மட்டுமா, பி.எஸ்.என்.எல். நிறுவனத்திற்கு 4ஜி அலைகற்றையே தராத நிலையில், தனியார்களை 5ஜி அலைக்கற்றை ஏலத்தில் பங்குபெறவும் அனுமதித்தது. இப்போது விருப்ப ஓய்வை ஏற்க மறுக்கும் பி.எஸ்.என்.எல். ஊழியர்களை ''தேசத் துரோகிகள்'' என்று முத்திரை குத்தி அழைப்பது ஞ் இப்படி பி.எஸ்.என்.எல்.நிறுவனத்திற்கு எதிரான நடவடிக்கைகளின் பட்டியல் மிக நீளமானது.

2018ல் கேரளாவில் பெரும் வெள்ள பாதிப்பு ஏற்பட்டபோது தகவல் தொடர்பு வழித் தடங்களை செயல்பாட்டில் திறந்து வைத்திருந்தது, பி.எஸ்.என்.எல்.ஊழியர்கள்தாம் என்பதை எவரும் மறந்துவிட முடியாது; அதே நேரம் தனியார் தொலைத்தொடர்பு சேவை அளிக்கும் நிறுவனங்கள் அந்த இடத்திலிருந்தே ஓடி ஒளிந்து மறைந்து விட்டார்கள்.

எனவே, ஏஐடியூசி பேரியக்கம் ஒன்றிய தொலைத்தொடர்பு அமைச்சர் தன் செயல்பாடுகளில் பி.எஸ்.என்.எல்.நிறுவனத்துடன் அரசு நிற்கிறது என்பதைக் காட்ட வேண்டும் எனக் கோருகிறது; அதற்கு மாறாக, பி.எஸ்.என்.எல். ஊழியர்களுக்கு எதிராக மிரட்டல்களை வெளியிடுவது எஜமானர்களின் அதிகாரத்தைக் காட்டும் பம்மாத்து வர்ணஜால நடவடிக்கைகளே ஆகும்.''

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## இந்த வார தம்பிக்குறள்

### 82. ஆற்றலின் ஆக்கம்

**ஆற்றலே ஈந்த அனைத்தும்உம் என்றால:்து**
**ஏற்ற உரையா மிகத்து.**

வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் அனைத்தையும், செயலாற்றலே அளித்துள்ளது என்பது சிறந்த நல்லுரையாகும்.

**ஆற்றவும் கற்றார் அறிவுடையோர் ஆவரோ**
**ஏற்ற தறிவா ரவர்.**

தேவையை அறிந்து செயல்படுபவரே அறிவுடையவர். பொருத்தமற்ற வெறும் செயல்பாடு மட்டுமே அறிவுடைமை யாகாது.

# மேலப்பாளையத்தில் பீடி தொழிலாளர் சங்க ஆர்ப்பாட்டம்

தரமான இலை, தூள் வழங்க வேண்டும். பிடித்தம் செய்த பிஎஃப் தொகையை காலம் கடத்தாமல் வழங்க வேண்டும். ஓய்வு பெற்ற தொழிலாளர்களின் பணிக்கொடையை உரிய காலத்தில் வழங்க வேண்டும். பீடி தொழிலாளர்களின் லீவு சம்பளத்தை உடனடியாக வழங்க வேண்டும். வருங்கால வைப்பு நிதி மூலம் குறைந்தபட்ச பென்ஷன் 5000 ரூபாய் வழங்க வேண்டும். இலவச வீட்டு மனை பட்டா வழங்க வேண்டும். பீடி தொழிலாளர்களை இஎஸ்ஐ திட்டத்தில் சேர்க்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நெல்லை மாவட்ட பீடி தொழிலாளர் சங்கம் சார்பில் மேலப்பாளையம் ஜின்னா திடலில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பாளை மேலப்பாளையம் ஒன்றிய செயலாளர் எஸ்.எம்.சேக் மதர் தலைமை தாங்கினார். ஏ.ஐ. டி.யு.சி. நெல்லை மாவட்ட பொதுச்செயலாளர் ஆர்.சடையப்பன் சிறப்புரையாற்றினார். மாவட்ட பொருளாளர் எம்.எஸ். பாலகிருஷ்ணன், மாவட்ட பீடி சங்க பொதுச் செயலாளர் கே.எஸ்.பாலு, மாதர் சங்க மாவட்ட செயலாளர் பி.சபியாள், ஜனசக்தி மாவட்ட பொறுப்பாளர் ஏ.முத்துகிருஷ்ணன், சாலையோர வியாபாரிகள் சங்க செயலாளர் பொ. கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர்.

மாவட்ட ஏ.ஐ.டி.யு.சி. துணைத் தலைவர் ஆர்.ரெங்கன் ஆர்ப்பாட்டத்தை வாழ்த்தி பேசினார். எம். சரோஜா நன்றி கூறினார்.




**தூய்மை பணியாளர்களின்**

**ஆய்வாளர் மீது நடவடிக்கை எடுத்திடுக!**

# லால்குடி நகராட்சி அலுவலகம் முன்பு ஏஐடியூசி ஆர்ப்பாட்டம்

திருச்சி புறநகர் மாவட்டம், லால்குடி நகராட்சி அலுவலகம் முன்பு தூய்மை பணியாளர்களின் ஆய்வாளர் மீது உள்ள முறைகேடு புகாரை விசாரித்து துறைரீதியான நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ஏ.ஐ.டி.யூ.சி உள்ளாட்சி தொழிலாளார்கள் சங்கம் லால்குடி கிளை சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு ஹரிஹரன் தலைமை வகித்தார். கோபிநாத், மணி, ராஜா, மாரிமுத்து, அண்ணாத்துரை ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஏ.ஐ.டி.யூ.சி உள்ளாட்சி தொழிலாளர்கள் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் சுப்பிரமணி, மாவட்ட துணை செயலாளர் ஜனசக்தி உசேன், லால்குடி கிளை தலைவர் ராஜவேல், சி.பி.ஐ. வட்ட செயலாளர் மார்டின், மாவட்டக்குழு பழனிராஜ் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.



# தோழர் ஆர்.எஸ்.மங்களம் எஸ்.கே.செல்லதுரை காலமானார்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தோழர் ஆர்.எஸ். மங்களம் எஸ்.கே.செல்லதுரை காலமானார். ஒன்றுபட்ட விரிந்த இராமநாதபுரம் மாவட்ட குழு உறுப்பினர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை வகித்தவர். விவசாய சங்கத்தின் இராமநாதபுரம் மாவட்ட தலைவராகவும், ஆர்எஸ் மங்கலம் பெரிய கண்மாய் பாசன தலைவராகவும் இருந்து பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

தோழர் எஸ்.கே.செல்லதுரை 65 ஆண்டுகளுக்கு மேலாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் இயக்கப் பணிகளில் தம்மை முழுமையாக அர்ப்பணித்தவர். பல்வேறு போராட்டங்களை முன்னின்று நடத்தியவர். அரசின் அடக்குமுறையை எதிர்கொண்டு சிறைத் தண்டனையை ஏற்றவர். 29.7.2022 ல் தம்முடைய 82 வது வயதில் தமது சிந்தனையை நிறுத்திக் கொண்டுள்ளார்.

தோழர் எஸ்.கே.செல்லதுரை புகழுடம்புக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் என்.எஸ்.பெருமாள், ஏ.ஐ.டி.யூ. சி. மாவட்ட பொதுச் செயலாளர் என்.கே. ராஜன், கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தோழர் எஸ்.பி.ராதா கட்சியின் திருவாடானை தாலுகா குழு முன்னாள் செயலாளர் கே. குருசாமி, திருவாடனை தாலுகா செயலாளர் முருகேசன், தேசிங்கு ராஜா மற்றும் தோழர்கள் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.




# இடதுசாரி விவசாயத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

55 வயதைக் கடந்த அனைத்து கிராமப்புற உழைப்பாளர்களுக்கும் மாதத்திற்கு ரூ.5 ஆயிரம் ஓய்வூதியம் வழங்கிட வேண்டும். ஒன்றிய பாஜக அரசு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைத் திட்டத்தின் வேலை நாட்களை 200 நாட்களாகவும் தினக்கூலியை ரூ.600 ஆகவும் உயர்த்திட வேண்டும். நகர்ப்புறத்திற்கும் திட்டத்தை விரிவுபடுத்திட வேண்டும். வீடற்ற, வீட்டுமனையற்ற ஏழைகளுக்கு குறைந்தபட்சம் ரூ.5லட்சத்தில் வீடு கட்டித்தர வேண்டும். நிலச்சீர்திருத்தச் சட்டத்தினை முறையாக செயல்படுத்தி, நிலமற்ற ஏழைகளுக்கு உபரி நிலத்தையும் புறம்போக்கு நிலத்தையும் பகிர்ந்து அளிக்க வேண்டும். பொது விநியோகத்தைப் பலப்படுத்தி கேரள அரசைப் போல மளிகைத் தொகுப்பை இலவசமாக வழங்கிட வேண்டும். சமீபத்திய ஊதியக்குழு பரிந்துரைகளைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு, விலைவாசி உயர்விற்கு ஏற்ப, விவசாயத் தொழிலாளர்களுக்கான தினக்கூலியை உடன் நிர்ணயம் செய்து அமல்படுத்திட வேண்டும். அரிசி, கோதுமை, தயிர் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் மீது கருணையற்ற முறையில் ஜிஎஸ்டி வரி விதித்துள்ள ஒன்றிய அரசு உடனடியாக திரும்பப்பெற வேண்டும், தாழ்த்தப்பட்டவர்கள் பழங்குடியினர், பெண்கள், சிறுபான்மையினர் மீதான தாக்குதலை உடனடியாக நிறுத்திட வேண்டும். கல்வி, சுகாதாரத்தை தனியார்மயமாக்குவதை கைவிட வேண்டும். அனைத்து விவசாயிகளுக்கும் உற்பத்தி பொருள்களுக்கு குறைந்த பட்ச ஆதாரவிலையை தீர்மானித்து வழங்கிட வேண்டும்.

அனைத்து கிராமப்புறத் தொழிலாளர்களை 'இஷ்ரம்' மூலம் பதிவு செய்து சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை செயல்படுத்திட வேண்டும். கேஸ் விலையேற்றத்தைத் திரும்பப் பெற வேண்டும். கிராமப்புறப் பெண்கள் வாழ்க்கைச் செலவுகளை ஈடு கட்டிட பல்வேறு நுண்நிதி நிறுவனங்களின் கடன் வலையில் தள்ளப் பட்டுள்ளனர்; இந்த அபாயத்தை தடுத்திட தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கூட்டு றவு வங்கிகள் மூலம் விவசாயத்தொழிலாளர் களுக்கு வட்டியில்லா கடன்கள் வழங்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட 28 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து இடதுசாரி விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் சார்பில் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**மதுரை:** மதுரை மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு, திருவள்ளுவர் சிலை அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வி.தொ.ச.மா. செயலாளர் ஜோதிராமலிங்கம், அ.இ.வி.தொ.ச.மா.செயலாளர் பாண்டியன் ஆகியோர் தலைமை தாங்கினர். பெத்தனசாமி, பாண்டி,









விருமாண்டி முன்னிலை வகித்தனர். சி.பி.ஐ புறநகர் மாவட்டச் செயலாளர் பி.முத்துவேல், நகர மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.முருகன், சி.பி.ஐ(எம்) நகர மாவட்டச் செயலாளர் மா.கணேசன், ஏ.ஐ.டி.யு.சி மாவட்ட பொது செயலாளர் எம்.நந்தாசிங் ஆகியோர் போராட்டத்தை வாழ்த்திப் பேசினர். மேலும், எஸ்.கே.எம் மதுரை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சந்தனம், மாதர் சங்க மாநகர் மாவட்டச் செயலாளர் இராஜலெட்சுமி உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

**உளுந்தூர்பேட்டை:** கள்ளக் குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலக முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டத் தலைவர் அ.பா.பெரியசாமி, மாநில நிர்வாக குழு உறுப்பினர் கே.எஸ். அப்பாவு ஆகியோர் தலைமை வகித்தனர்.

ஏஐடியுசி மாநில நிர்வாக குழு உறுப்பினர் ஆ.வளர் மதி, மாவட்ட பொருளாளர் டி.கோவிந்தராஜ், சிஐடியு மாவட்ட பொருளாளர் ஏ. வீராசாமி, விச மாவட்டச் செய லாளர் ஏ.வி.ஸ்டாலின்மணி, மாவட்டச் செய லாளர் பி.சுப்பிரமணியன், எம்.எல். மாவட்ட செய லாளர் கலியபெருமாள், விதொச சார்பில் பி.ரீதா, ஏ.பால்ராஜ், எம்.முருகேசன், கே.மஞ்சப்பன் இரா.நந்த கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட கலர் கலந்து கொண்டனர்.

**மயிலாடுதுறை :** மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் வி.நீதி சோழன் தலைமை தாங்கினார். கோரிக்கை விளக்கி மாவட்ட செயலாளர் இரா.இடும்பையன், ஏ.ஐ.டி.யு.சி. மாவட்ட செயலாளர் கே.ராமன், எஸ்.சி.கணபதி, மா.பிரபாகரன், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் ஜெகதீஸ்வரன், ஒய்.எஸ். சர்புதின், மயிலாடுதுறை ஒன்றிய செயலாளர் மனோன்ராஜ் ஆகியோர் பேசினர். இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் 50க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**நல்லம்பள்ளி :** நல்லம்பள்ளி இந்தியன் வங்கி கிளை முன்பு ஒன்றிய தலைவர் எல்.சி.கிருஷ்ணன் தலைமையில், சங்க மாவட்ட துணை தலைவர் என்.முருகேசன், சங்க மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் வெ. பை.மாதையன், ஆர்.மல்லையா ஆகியோர் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் சங்க மாவட்ட செயலாளர் ஜெ. பிரதாபன் கோரிக்கைகளை விளக்கி பேசினார். ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட துணை தலைவர் ஜி.ராஜகோபால், மாவட்டக்குழு உறுப்பினர்கள் காளியம்மாள், அலமேலு, ஜி.சம்பத், பழனியப்பன், கோவிந்தம்மாள், மாரியப்பன் மற்றும் விவசாய தொழிலாளர்கள் கலந்துக் கொண்டனர்.

**அம்மாபேட்டை :** தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடை பெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டத் தலைவர் பாலு தலைமை வகித்தார். இதில் பலர் பங்கேற்றனர்.




### விவசாயிகளுக்கு துரோகம் செய்யும் ஒன்றிய அரசைக் கண்டித்து

# ஐக்கிய விவசாயிகள் முன்னணி ஆர்ப்பாட்டம்






ஐக்கிய விவசாயிகள் முன்னணி எடுத்த முடிவின்படியும், அகில இந்திய விவசாயிகள் போராட்ட ஒருங்கிணைப்பு குழு வழி காட்டியபடியும் தமிழ்நாடு முழுவதும் மாவட்ட, ஒன்றிய தலைநகரங்களில் சாலை மறியல் போராட்டம் நடத்தப்பட்டது. டெல்லி மற்றும் இந்தியா முழுவதும்13 மாத காலங்கள் போராடி, 714 பேர் இறந்த நிலையில் ஒன்றிய பிரதமர் நரேந்திர மோடி, மூன்று சட்டங்கள் மற்றும் மின்சார திருத்த மசோதா திரும்ப பெறப்படும் என்றதுடன் விவசாயிகளின் பிற கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் என்று வாக்குறுதி தந்ததுடன், அது தொடர்பான ஒப்பந்தத்தை ஏற்படுத்தி ஏழு மாதங்கள் கடந்தும் எதையும் நிறைவேற்றாது நம்பிக்கை துரோகம் செய்த ஒன்றிய பாஜக அரசை கண்டித்து ஜூலை 31 அன்று தமிழ்நாடு முழுவதும் மாவட்டம் மற்றும் ஒன்றிய நகர தலைநகரங்களில் சாலை மறியல் போராட்டம் அறிவிக்கப்பட்டபடி வெற்றிகரமாக நடந்தது.

80 மையங்களுக்கு மேல் நடந்த இப் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளை காவல்துறை கைது செய்தது.

**விருதுநகர் :** விருதுநகர் பேருந்து நிலையம் எதிரில் நடைபெற்ற சாலை மறியலுக்கு ஐக்கிய விவசாயிகள் முன்னணி ஒருங்கிணைப்பாளர் காளிதாஸ் தலைமை வகித்தார். தவிச சார்பில் எஸ்.பழனிக்குமார், பாலமுருகன், சமுத்திரம், சக்கணன், செல்வம், முத்துகுமார், மாரீஸ்வரி சிபிஎம் விச சார்பில் முருகன், மனோஜ் குமார் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். அனைவரையும் போலீசார் கைது செய்தனர்.

வத்திராயிருப்பில் தவிச மாவட்ட தலைவர் சவுந்திரபாண்டியன், சிபிஎம் விச மாவட்ட தலைவர் விஜயமுருகன் ஆகியோர் தலைமையில் மறியல் நடைபெற்றது. தவிச சார்பில் வட்ட செயலாளர் கோவிந்தன், பொன்னு பாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். அனைவரையும் போலீசார் கைது செய்தனர்.


**மயிலாடுதுறை :** மயிலாடுதுறை மாவட்டத்தில் சீர்காழியில் எஸ்.கே.எம். சார்பில் புதிய பேருந்து நிலையம் அருகில் சாலை மறியல் நடைபெற்றது. விவசாய சங்கத்தின் மாவட்ட செயலாளர் பி.வீரராஜ் தலைமை தாங்கினார். ஒன்றிய செய லாளர் கே.வரதராஜன், சிபிஐ ஒன்றிய செயலாளர் வே.நீதி சோழன் உள்ளிட்ட பலர் கைது செய்யப் பட்டனர்.

**திருமங்கலம்:** மதுரை திருமங்கலம் தாலுகா அலுவலகம் முன்பு, நடைபெற்ற மறியல் போராட்டத்திற்கு எஸ்.கே.எம். மதுரை மாவட்ட ஒருங் கிணைப்பாளர் சந்தனம் தலைமை தாங்கினார். மதுரை சி.பி.ஐ தமிழ் நாடு விவசாயிகள் சங்கத்தின் இரவிவர்மா முன்னிலை வகித்தார். புறநகர் மாவட்டச் செயலாளர் முத்து வேல் போராட்டத்தில் வாழ்த்திப் பேசி னார். மேலும் மக்கள் அதிகாரம் நாக ராஜன், சி.பி.எம் தமிழ்நாடு விவ சா யிகள் சங்கத்தின் அய்யாவு, ஏ.ஐ. கே.எம் மாவட்ட அமைப்பாளர் பகத் சிங், சி.பி.ஐ மாவட்ட குழு உறுப் பினர்கள் சுப்புக்காளை, விஜயா, செல்லவேலு, நாகஜோதி, அம்ச வள்ளி, நல்லகுரும்பன், ஜெகநேசன், சுதாகர் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

**யா.ஒத்தக்கடை :** மதுரை யா.ஒத் தக்கடை அருகே கோதண்டராமர் கோவில் முன்பு சாலை மறியலில் ஈடுபட்டனர். ஏ.ஐ.டி.யு.சி மாவட்டத் தலைவர் பா.காளிதாஸ் தலைமை தாங்கினார். அ.இ.வி.ச மாவட்டச் செயலாளர் இளங்கோவன், வி.சி.க ஒன்றிய செயலர் ஆறுமுகம், மக் கள் அதிகாரம் பாண்டியராஜன் முன்னிலை வகித்தனர். சிபிஐ மாவட்ட குழு உறுப்பினர்கள் திலகர், சந்திவீரன், நாகராஜ் மற்றும் மேலூர் தாலுகா செயலர் சதீஸ் குமார் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்

**பரமக்குடி :** தமிழ்நாடு விவசா யிகள் சங்கம் சார்பில் பரமக்குடி தலைமை தபால் நிலையம் முன்பு இராமநாதபுரம் மாவட்ட தலைவர் கே.ஜீவா தலைமையில் மறியல் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் என்.எஸ்.பெருமாள், விவசாய சங்க செயலாளர் ஆர்.கருணாநிதி, மாவட் டக்குழு உறுப்பினர்கள் கே.சுப்ர மணியன், ஜெயசீலன், கே.ஆர். சுப்பிரமணியன், உக்கிரபாண்டியன், மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் ராஜா, மயில்வாகனன், முத்துராமலிங்கம் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

# கட்டிட தொழிலாளர் சங்க கிளை அமைப்புக் கூட்டம்




தமிழ்நாடு ஏஐடியூசி கட்டிட தொழிலாளர் சங்கத்தின் மாணிக்கம்பட்டி காட்டுவளவு கிளை அமைப்புக் கூட்டம் விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் எம்.முனுசாமி, மாவட்ட துணைத்தலைவர் ஏ.சுப்ரமணி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றி வழிநடத்தினர். சங்க உறுப்பினர்கள் 20 பேர் கலந்து கொண்டனர். தலைவராக ஏ.கிருஷ்ணமூர்த்தி, துணைத்தலைவராக பி.தங்கராஜ், செயலாளராக பி.விஜயகுமார், துணைச் செயலாளராக எஸ்.மாரியப்பன், பொருளாளராக ஜி.கோபால் தேர்வு செய்யப்பட்டனர்.

**ஏஐடியூசி ஆட்டோ தொழிற்சங்க கிளை துவக்கம் :** ஆர்.எஸ்.மங்கலம் தாலுகாவில் உள்ள உபபூரில் ஏஐடியூசி ஆட்டோ தொழிலாளர் சங்கம் துவக்கப்பட்டது. இதன் துவக்க விழா ஏஐடியூசி மாவட்ட துணைத் தலைவர் வி.தங்கராஜ் தலைமையில் நடைபெற்றது. ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் என்.கே.ராஜன் சங்கத்தின் செயல்பாடுகள் குறித்தும் ஏ.ஐ.டி.யு.சி. முன்வைக்கும் தொழிலாளர்களின் கோரிக்கைகளை குறித்து விளக்கிப் பேசினார். ஆட்டோ தொழிற்சங்க உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர் சங்க செயலாளர் நன்றி கூறினார்.

**ஏஐடியூசி புதிய கிளை துவக்க விழா:** மதுரை புறநகர் மாவட்டம், திருமங்கலம் ஏஐடியுசி சார்பில், டாக்டர் அப்துல்கலாம் ஆட்டோ ஓட்டுனர் சங்கம் துவக்க விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் தலைவராக கண்ணன், செயலாளராக பாண்டி, பொருளாளராக மணிகண்டன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். இதில் திருமங்கலம் தாலூகா செயலாளர் சுப்பிரமணியன், புறநகர் மாவட்ட துணைத்தலைவர் மாரி, புறநகர் மாவட்டக் குழு உறுப்பினர் ராஜேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும், புறநகர் மாவட்ட ஏஐடியூசி துணைப் பொது செயலாளர் பாலகிருஷ்ணன் உறுப்பினர்களுக்கு ஏஐடியூசி அடையாள அட்டையினை வழங்கினார்.

### பாலக்கோம்பை ஊராட்சி நிர்வாக

# முறைகேடுகளைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

ஆண்டிப்பட்டி தாலுகா, பாலக்கோம்பை ஊராட்சியில் நிலவி வரும் சுகாதார சீர்கேடு மற்றும் பஞ்சாயத்து நிர்வாகத்தில் நடைபெற்று வரும் மோசடி முறைகேடுகளை கண்டித்தும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் பாலக்கோம்பையில் தேவர் சிலை முன்பு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பாலக்கோம்பை கிராம கிளைகள் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் பா.பிச்சைமணி தலைமை தாங்கினார். ஒன்றிய பொருளாளர் முனீஸ்வரன் மற்றும் ஒன்றிய குழு உறுப்பினர் பழனிச்சாமி கண்டன உரையாற்றினர். மாவட்ட குழு உறுப்பினர் பரமேஸ்வரன் நிறைவுரையாற்றினார். ஒன்றிய குழு உறுப்பினர்கள் வேலுச்சாமி, ஜனசக்தி பிரபாகரன், சந்தானம், தங்கபாண்டி, சுந்தரம் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# இலவச பஸ்பாஸ் வழங்கிடுக!

## தஞ்சை மாவட்ட கட்டுமானத் தொழிலாளர் சங்க மாநாட்டில் கோரிக்கை

தஞ்சாவூர் மாவட்ட கட்டுமானத் தொழிலாளர் சங்க மாநாடு நடைபெற்றது. ஏஐடியூசி மாநிலச் செயலாளர் சந்திரகுமார் தலைமை வகித்து மாநாட்டு தொடக்க உரையாற்றினார். மாவட்ட துணைச் செயலாளர் சுகுமாறன் வரவேற்றார். மாவட்டச் செயலாளர் தில்லைவனம் வேலை அறிக்கையை வாசித்தார். மாவட்டப் பொருளாளர் சௌந்தரராசன் வரவு செலவு அறிக்கையை வாசித்தார். ஏஐடியூசி சட்ட ஆலோசகர் பாரதி, மாவட்டத் தலைவர் சேவையா, மாவட்ட துணைச் செயலாளர் மதிவாணன், மாவட்டப் பொருளாளர் கோவிந்தராஜன், மாவட்ட துணைச் செயலாளர் மணி மூர்த்தி, தமிழ் நாடு விவசாயிகள் சங்கம் மாநிலக் குழு தர்மராஜன், விவசாயத் தொழிலாளர் சங்க ஒன்றியச் செயலாளர் சேகர் உள்பட வாழ்த்தினர். கூட்டத்தில் நல வாரியத்தில் பதிவுப் பெற்ற அனைத்து வீடற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் வீடு கட்டித் தர வேண்டும். ஓய்வூதியம் ரூ.6,000 விண்ணப்பித்த நாளில் இருந்து வழங்க வேண்டும். உழவர் பாதுகாப்பு அட்டையை காரணம் காட்டி கிராம நிர்வாக அலுவலர்கள் நல வாரியத்தில் பதிவு செய்ய மறுப்பதை கை விட வேண்டும். கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கான கல்விச் செலவை நலவாரியம் முழுமையாக ஏற்க வேண்டும். 1982 ம் ஆண்டு சட்டத்தின் படி கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பி.எப்.போனஸ், பணிக் கொடை, வேலை இல்லாத காலத்திற்கு நிவாரணம், இலவச பஸ் பாஸ் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### மின்சார திருத்த மசோதா 2022ஐ

# அறிமுக நிலையிலேயே கைவிட வேண்டும்

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தலைவர் எஸ்.குணசேகரன் எக்ஸ்.எம்.எல்.ஏ., பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

2020 ஆம் ஆண்டு ஒன்றிய அரசு கொண்டுவந்த மின்சார திருத்த மசோதாவை கைவிட வேண்டும் என்று வலியுறுத்தி அகில இந்திய அளவில் தொடர் போராட்டங்கள் நடந்தது. இதற்கு எதிராகவும் மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராகவும் 13மாதங்கள் விவசா யிகள், தொழிலாளர்கள் நடத்திய தொடர் போராட்டங்களுக்கு பின் ஒன்றிய அரசு மின்சார திருத்த மசோதாவை கைவிடுவதாக அறிவித்து உறுதி அளித்தது. விவசாயிகளும் ஒன்றிய அரசின் உறுதியை ஏற்று உடன் போராட்டத்தை தற்காலிகமாக ஒத்தி வைத்தார்கள். இந்த நிலையில் ஒன்றிய அரசு தான்கொடுத்த உத்தரவாதத்திற்கு மாறாக அமைச்சரவை கூட்டத்தில் முடிவு செய்து, நாடாளுமன்ற கூட்டத்தில் மின்சார திருத்த மசோதா 2022ஐ அறிமுகப்படுத்தியிருப்பதை வன்மையாக தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கண்டிக்கிறது. இந்த மசோதா சட்டமாக்கப்பட்டால், விவசா யிகளின் வேளாண் உற்பத்தி உயர்விற்காக கொடுக்கப்பட்டுவரும் இலவச மின்சாரம் ரத்து செய்யப்படும்.

இதனால் தமிழகம் மற்றும் பிற மாநில உணவு தேவையை பூர்த்தி செய்து கொண்டிருக்கும் உணவு உற்பத்தி பெருமளவு பாதிக்கப்படும். உற்பத்தி குறைகிற போது பட்டினி சாவுகள் நடக்கும். வீடுகளுக்கு வழங்கப்பட்டு வருகிற கட்டண சலுகை ரத்து செய்யப்படும். நெசவாளர்களுக்கு வழங்கப்படுகிற சலுகை மின்சாரம் ரத்து செய்யப்படும். சொல்லப்போனால் மின் கட்டண உயர்வு நாளடைவில் பல மடங்கு உயர்த்துவதற்கான வாய்ப்பை இச்சட்டம் வடிவமைக்கும் என்பதுடன், மின்துறை சில ஆண்டுகளில் தனியாரிடம் விடப்படும். தனியார் துறையில் இருந்தால் அவர்களின் லாப வேட்டைக்கு மக்களின் அன்றாட வாழ்வு முறை இரையாகும். அத்தியாவசிய தேவையாக மாறி இருக்கிற மின்சாரத்திற்கான மக்களின் பயன்பாட்டு உரிமை தடுக்கப்படும். எனவே அறிமுக நிலையிலேயே இந்த மசோதாவை எதிர்த்து நாடு முழுதும் போராட்டம் தொடங்கி இருக்கிறது. ஆகஸ்ட் இறுதியில் டெல்லியில் போராட்டத்தை விவசாயிகள் தொடங்க இருக்கிறார்கள். ஆகவே உடனடியாக இந்த சட்ட மசோதாவை அறிமுக நிலையிலேயே கைவிட வேண்டும் என ஒன்றிய அரசை தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்துகிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளனர்.

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

# ஊராட்சி தலைவர் மூர்த்தி படுகொலை

## இரா.முத்தரசன் கண்டனம்

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஒன்றியத்தின் தாளவேந்திரம் ஊராட்சியின் தலைவர் மூர்த்தி ஆக. 02 இரவு கோரமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணி ஊழியரான மூர்த்தி, மக்களின் நன்மதிப்பையும், நம்பிக்கையும் பெற்ற ஊராட்சித் தலைவராக திகழ்ந்தவர். இவர் வாகனத்தில் சென்ற கொண்டிருந்தபோது சமூகவிரோதிகள் வழிமறித்து கொடூரமான முறையில் வெட்டிப் படுகொலை செய்துள்ளனர். சமூகவிரோதிகளின் கோழைத்தனமான தாக்குதலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. இந்தப் படுகொலை சம்பவத்தில் தொடர்புடைய, இதற்கு துணை போன அனைவரையும் உடனடியாக கைது செய்து, சட்டத்தின் சந்து, பொந்துகளில் தப்பி விடாமல் தண்டிக்கும் வகையில் காவல்துறையினர் உறுதியான உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துவதுடன், உயிரிழந்த ஊராட்சி தலைவர் மூர்த்தியின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரை பிரிந்துவாடும் குடும்பத்தாருக்கும், தோழர்களுக்கும், பொதுமக்களுக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் அறிக்கையில் கூறியுள்ளார்.

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்ட மாநாடு!




ஈரோடு: இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்ட 13வது மாநாடு, ஈரோட்டில் கட்சியின் மாவட்ட அலுவலகத்தில்.' தோழர்கள் கே.எஸ்.நாச்சிமுத்து டி.கே.நல்லப்பன் அரங்கில்' ஜூலை 31 அன்று நடைபெற்றது. இம்மாநாட்டில் முன்னதாக, கட்சிக் கொடியை கட்சியின் மாவட்டக்குழு உறுப்பினர் எஸ். மகாலிங்கம் ஏற்றி வைத்தார். எஸ்.டி.பிரபாகரன், எம்.குணசேகரன், எம்.ராணி ஆகியோர் இம் மாநாட்டுக்கான தலைமைக் குழுவாக செயல்பட்டனர்.

இம்மாநாட்டை துவக்கிவைத்து கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் த.ஸ்டாலின் குணசேகரன் உரையாற்றினார். இம்மாநாட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளரும் திருப்பூர் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினருமான கே.சுப்பராயன் கலந்து கொண்டு, கட்சியில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து உறுப்பினராக இருந்து வரும் மூத்த தோழர்களை பாராட்டி பொன்னாடை போர்த்தி கவுரவித்தார். பின்னர் அவர், அரசியல் விளக்கவுரையாற்றினார்.

கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் கே.ஆர். திருநாவுக்கரசு வேலையறிக்கையை சமர்பித்தார்.

முன்னதாக, மாவட்ட துணைச் செயலாளர் வி.செல்வராஜன் வரவேற்புரையாற்றினார். மறைந்த தோழர்களுக்கு அஞ்சலி தீர்மானத்தை கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர் டி.சோமசுந்தரம் முன் மொழிந்தார்.

**தேர்வு:** கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டத்திற்கான புதிய மாவட்டச் செயலாளராக எஸ்.டி.பிரபாகரன், துணைச் செயலாளர்களாக எஸ்.சின்னசாமி, எம்.குணசேகரன், பொருளாளராக என்.ரமணி ஆகியோர் ஏகமனதாகத் தேர்வு செய்யப்பட்டனர். இம்மாநாட்டில், கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினரும், முன்னாள் எம். எல்.ஏ.வுமான நா.பெரியசாமி மாநாட்டு நிறைவுரையாற்றினார். முன்னதாக, சி.எம்.துளசிமணி, எஸ்.பொன்னுசாமி, எஸ்.சின்னசாமி ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர்.

**தீர்மானங்கள் வருமாறு:** பெருந்துறை புறவழிச்சாலையில் அடிக்கடி நிகழும் சாலை விபத்துக்களைத் தவிர்க்க, திருப்பூர் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் கே.சுப்பராயனின் தொடர் நடவடிக்கைகளால், காஞ்சிக்கோவில் ரோடு, துடுப்பதி ரோடு சந்திப்புகளில் மேம்பாலங்கள் அமைக்கவும், சாலையின் இருபுறங்களிலும் சர்வீஸ் ரோடுகள் அமைக்கவும் மத்திய அரசின் தேசிய நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கு உடனடியாக உரிய நிதி ஒதுக்கீடு செய்து பணிகளைத் துவக்க வேண்டும். மேலும், ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வாவிக்கடை உயர்மட்டப் பாலம் அமைக்கும் பணிகளை உடனடியாகத் தொடங்க வேண்டும். சென்னிமலையில் உள்ள மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டும். கீழ்பவானி வாய்க்காலில் கான்கிரீட் தளம் அமைக்கும் திட்டத்தை கைவிட வேண்டும். பெருந்துறையில் உள்ள அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை பலதுறை சிறப்பு மருத்துவமனையாக (மல்டி சூப்பர் ஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிடல்) ஆக தரம் உயர்த்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிறைவில், கட்சியின் ஈரோடு வட்டாரச் செயலாளர் ஜி.கல்யாணசுந்தரம் நன்றியுரையாற்றினார்.

### 50 % இடஒதுக்கீட்டை வற்புறுத்தி

# மாதர் சம்மேளனம் 9 நாள் தர்ணா

இந்தியப் பெண்கள் அமைப்புக்களில் பழமையானதும் மிகப் பெரிய மக்கள் ஸ்தாபனமும் ஆன இந்திய மாதர் தேசிய சம்மேளனம் (ஙிதிமிகீ) ஆகஸ்ட் 1ல் தலைநகர் டெல்லி ஜந்தர் மந்தரில் ஒன்பது நாட்கள் நீண்ட தர்ணா போராட்டத்தைத் தொடங்கியது. நாடாளுமன்றம் மற்றும் மாநிலச் சட்ட மன்றங்களில் பெண்களுக்கு ஐம்பது சதவீத இடஒதுக்கீடு மசோதாவை அறிமுகம் செய்து அதனை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என மாதர் சம்மேளனம் கோரியது. ஆகஸ்ட் 9ல் நிறைவடையும் தர்ணா போராட்டத்திற்குப் பல்வேறு மாநிலங்களிலிருந்து பெண்கள் பங்கேற்று வருகின்றனர்.

திட்டக்குழுவின் மேனாள் உறுப்பினரும் புகழ்பெற்ற சமூகச் செயற்பாட்டாளர் மற்றும் எழுத்தாளருமான டாக்டர் சயீதா ஹமீது தர்ணாவைத் தொடங்கி வைத்து, "சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளுக்குப் பிறகும் பாராளுமன்றத்தில் பெண் உறுப்பினர்கள் எண்ணிக்கை வெறும் 14 சதவீதம்தான் என்றால், விடுதலை அமுதப் பெருவிழாக்கள் கொண்டாடுவதில் அர்த்தமில்லை" என்று குறிப்பிட்டார்.

மேலும், "பெண்களுக்கு 33 % இட ஒதுக்கீட்டிற்கான மசோதா நாடாளுமன்றத்தில் 1996ல் தாக்கல் செய்யப்பட்டு இப்போது 25 ஆண்டுகளுக்கு மேலாகக் கடந்து விட்டது; அடுத்து வந்த அரசுகளும் அதைச் சட்டமாக நிறைவேற்றுவதில் தோல்வி அடைந்திருப்பது இந்திய ஜனநாயகத்தில் நீங்காத கறையாக நீடிக்கிறது" எனச் சுட்டிக் காட்டினார்.

'தனது இரண்டு முறை ஆட்சி காலம் முழுமையிலும் பிரதமர் நரேந்திர மோடி அந்த மசோதா குறித்து இறுக்கமான மௌனம் சாதிக்கிறார்' என்பதை இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஆனிராஜா சுட்டிக்காட்டி, "நாட்டு மக்கள் தொகையில் செம்பாதியினராகிய பெண்கள் தங்கள் எண்ணிக்கை விகிதத்திற்கு ஏற்ப போதுமான பிரதிநிதித்துவ இடங்களைச் சட்டமியற்றும் மன்றங்களில் பெற்றிராத நிலையில், எப்படி நீங்கள் அமிர்த காலத்தை (அம்ரித் கால்) கொண்டாட முடியும்?" என வினவினார்.

மேலும் பேசும்போது, 'பாஜக, அதன் கூட்டணி கட்சிகள் உட்பட பெரும்பான்மை அரசியல் கட்சிகளும் அவற்றின் தேர்தல் அறிக்கைகளில் அம்மசோதாவை நிறைவேற்ற உதவிடுவோம் என மீண்டும் மீண்டும் வாக்குறுதி அளித்தாலும் அந்த வாக்குறுதிகள் வெறும் உதட்டளவிலேயே உள்ளன என்பது கேலிக்குரியது. இம்மசோதாவை மேலெடுத்துச் சென்று நிறைவேற்றுவதில் இந்த அரசு அடைந்த தோல்வி, பெண்களின் சமூக அந்தஸ்து மற்றும் பெண்களை அரசியல் அதிகாரப்படுத்துவது குறித்த பிரச்சனையில் அது பின்பற்றும் மனுவாதி கொள்கையின் மற்றுமொரு வெளிப்பாடும் விளக்கமுமாகும்' என்று அவர் கூறினார்.

இந்த 75வது சுதந்திரத் திருநாளில் இந்தியப் பெண்களின் குரல்களையும் கோரிக்கைகளையும் அரசு கேட்டு மதிக்கும் என நம்புவதுடன், நாடாளுமன்றம் மற்றும் சட்ட மன்ற அவைகளில் பெண்களுக்குச் சம பிரதிநிதித்துவம் அளிக்கப்படும் என இந்திய மாதர் தேசிய சம்மேளனம் உண்மையாக நம்புகிறது.

# வீட்டுமனை பட்டா, நிலப்பட்டா வழங்கக் கோரி வட்டாட்சியரிடம் மனு!

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம் மாதேமங்கலம் வருவாய் கிராமம் ஜீவாநகரில் பன்னெடுங்காலமாக வீடு கட்டி குடியிருந்தும், விவசாய சாகுபடி செய்துவரும் நிலம் அரசு போடுகால் புறம் போக்கு நிலமாகும். இதற்கு பட்டா கேட்டு பல ஆண்டுகளாக மனு அளித்து வந்தனர். ஆனால் நில உரிமை பட்டாவோ, வீட்டு மனை பட்டாவோ வழங்கப்படவில்லை. இந்நிலையில் கடந்த 11.04.2022 அன்று அரசு போடுகால் புறம்போக்கு நிலங்களில் குடியிருந்தும், பயிர் சாகுபடி செய்து வரும் விவசாயிகளுக்கு 1905 ன் படி 7 ஆம் அறிவிப்பு நோட்டீஸ் வழங்கினார் நல்லம்பள்ளி வருவாய் ஆய்வாளர். இதனை போல் மாவட்டம் முழுவதும் வழங்கிய நோட்டீஸை ரத்து செய்ய வேண்டும் என்றும், இந்த நோட்டீஸை ரத்து செய்து நில உரிமை பட்டா, வீட்டுமனை பட்டா வழங்க வேண்டி தமிழகம் முழுவதும் கடந்த 25.04. 2022 அன்று ஆர்ப்பாட்டம் நடத்தி மனு அளித்தோம். தருமபுரி மாவட்ட ஆட்சியர் இதன் மீது நடவடிக்கை எடுக்க நல்லம்பள்ளி வட்டாட்சியர் அவர்களுக்கு குறிப்பாணை அனுப்பியுள்ளார். இதன் நகல் தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளரான ஜெ.பிரதாபன் ஆகிய எனக்கு நகல் வந்தது.

இதன் அடிப்படையில் ஆக. 04 அன்று மாதேமங்கலம் வருவாய் கிராமம் ஜீவா நகரில் குடியிருந்தும் விவசாய பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு நில உரிமை பட்டாவும், குடியிருக்கும் வீடுகளுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க வேண்டி நல்லம்பள்ளி வட்டாட்சியரிடம் தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் சங்க மாவட்ட செயலாளர் ஜெ. பிரதாபன் தலைமையில் மனு அளிக்கப்பட்டது.

இதில் சங்க மாவட்ட துணைத்தலைவர் என்.முருகேசன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் வெ.பை.மாதையன், மாவட்டக்குழு உறுப்பினர் மகேஷ்வரி, மற்றும் நில உரிமை கேட்கும் விவசாயிகள் அனைவரும் உடன் இருந்தனர்.

இவ்வாறு ஜெ.பிரதாபன் தெரிவித்துள்ளார்.




### ஸ்ரீமதி மர்ம மரணம்:

# அப்பாவி மாணவர்கள் மீது பொய் வழக்கு!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்!




கள்ளக்குறிச்சி மாவட்டம், வேப்பூர் அடுத்த பெரியநெசலூர் கிராமத்தை சேர்ந்தவர் ராமலிங்கம் மகள் ஸ்ரீமதி. இவர் கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் அருகே உள்ள சக்தி தனியார் பள்ளியில் விடுதியில் தங்கி பிளஸ் 2 படித்து வந்தார். கடந்த 13ம் தேதி பள்ளி வளாகத்தில் மாணவி ஸ்ரீமதி மர்மமான முறையில் உயிரிழந்தார். இது குறித்து சிபிசிஐடி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் வேப்பூர் கூட்ரோடு அருகே மாணவி ஸ்ரீமதியின் இறப்புக்கு தகுந்த நீதி வழங்க வேண்டும், அவரது குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும், ஸ்ரீமதியின் மரணத்திற்கு நியாயம் கேட்டு போராடிய கைது செய்யப்பட்ட அப்பாவி மாணவர்களை தமிழக அரசு உடனடியாக நிபந்தனை இன்றி விடுதலை செய்ய வேண்டும் என்றும், சிபிசிஐடி விசாரணையை துரிதப்படுத்தக் கோரியும், பள்ளியை தமிழக அரசே ஏற்று நடத்துதல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகி ராமச்சந்திரன், அகில இந்திய உழைக்கும் பெண்கள் அமைப்பு தலைவர் வஹிதா நிஜாம் மற்றும் மாவட்ட பொதுச் செயலாளர் குளோப், மாவட்ட தலைவர் துரை, மாவட்ட துணை தலைவர் மணிவாசகம், மாவட்ட குழு நிதி உலக நாதன் உட்பட்ட நூற்றுக்கணக்கானோர் இதில் கலந்து கொண்டனர்.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது மாநில மாநாடு





















**JANASAKTHI** Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 13.08.2022 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது மாநில மாநாட்டு பேரணி - பொதுக்கூட்டம்























Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.